# ஜாமக்காரன்

WATCHMAN


**VOLUME - 26** **ISSUE - 3**

*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com





காவல்காரன்

**கர்த்தருக்குள் அன்பானவர்களே,**

**இந்த 2016 மார்ச மாத ஜாமக்காரன் வழியாக உங்களை இப்போது மாதாமாதம் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.**

**கடந்த மாதம் திரும்பி பார்க்கிறேன் நெ.1 என்ற தலைப்பில் என் முதல் மிஷனரி ஊழிய அனுபவத்தை பகிர்ந்துக்கொண்டதில் திருப்தியடைகிறேன். இந்த மாதத்தில் திரும்பி பார்க்கிறேன் நெ.2A, 2Bல் என் உழிய அனுபவங்களில் சில பகுதிகளையும் வெளியிடுகிறேன். அடுத்த மாதமும் திரும்பி பார்க்கிறேன் நெ.3,4 என்ற தலைப்பில் என் ஊழியங்களில் ஏற்பட்ட மற்ற சில அனுபவங்களையும் பகிர்ந்துக் கொள்வேன்.**

‘ **அந்நிய பாஷை குழப்பம்** என்ற தலைப்பில் நீண்ட காலமாக எதிர்ப்பார்த்த **அந்நியபாஷைபற்றிய புத்தகம் அத்தியாயம் அத்தியமாக கர்த்தருக்கு சித்தமானால் ஜாமக்காரனில் 2016 ஏப்ரல் மாதம் முதல்** வெளியிட்டு விரைவில் அவைகளை ஒன்று சேர்த்து புத்தகமாக வெளியிடுவேன். வாசகர்கள் ஜாமக்காரனில் வெளிவரும் அந்நியபாஷை பற்றிய தொடரை ஒவ்வொரு மாதமும் சேர்த்து தனி புத்தகமாக்கி வைத்துக்கொள்ளலாம்.

‘ அந்நியபாஷைபற்றி அறியவேண்டுமானால் நம் ஆண்டவர் இந்த உலகத்தையும் மனிதர்களையும் சிருஷ்டித்த ஆரம்பகால சரித்திரங்களை அறியவேண்டும். மனித வர்க்கம் தோன்றிய காலசூழ்நிலையும் ஒரே பாஷை,ஒரே மொழியாக பேசிய மக்கள் எப்படி சிதறடிக்கப்பட்டார்கள் என்பதையும் அறியவேண்டும். அதைத்தான் முதல் பகுதியில் எழுதியுள்ளேன்.

மேலும் **பொய்யான அந்நியபாஷை** உருவானதற்கு காரணமே பெந்தேகோஸ்தே சபை அல்லது ஆரம்பசபை என்று அழைத்துக்கொள்ளும் **பொய் பெந்தேகோஸ்தே** சபைளைப்பற்றியும் வாசகர்கள் அறியவேண்டும். ஆகவே பொய்யில் ஆரம்பித்த பெந்தேகோஸ்தே சபைகள் என்று அதன் செயல் அடிப்படையில் அதற்கு தலைப்பை கொடுத்துள்ளேன்.

# மார்ச் 2016

‘ வீதிக்கு 10 பெந்தேகோஸ்தே சபைகள் என்று பெருகியுள்ள, விதவிதமான பெயர்களிலுள்ள **பெந்தேகோஸ்தே சபைகளைப்பற்றியும்** எழுத வேண்டிய அவசியம் வந்தது. ஜெபத்தோடு அவைகளை வாசியுங்கள். வசன வெளிச்சத்தில் பெந்தேகோஸ்தே சபைகள் தங்களை பரிசோதித்து பார்க்க என் கட்டுரைகள் மிகவும் உதவியாக இருக்கும். கர்த்தருக்கு சித்தமானால் அடுத்த மாதம் சந்திப்போம்.

## பிஷப்மார்களின் ஓய்வு வயது 67:

‘ பிஷப்மார்களின் ஓய்வு வயது 67 என்பதைசுப்ரீம் கோர்ட் அங்கீகரிக்கவில்லை.

‘ முடிவுமே மாத கடைசியில் தெரியும். என்றாலும் நாங்கள் ஓய்வு வயதை எட்டவில்லை என்று கூறி ரிட்டயர்ட்ஆன பழைய மாடரேட்டர் அவர்கள் சென்னை ஆயரை பிஷப்பாக்கி அபிஷேக ஆராதனையும் நடத்திவிட்டார். இது நீதிமன்றத்தை அவமதித்த குற்றமாகும்.

‘ இப்படி துணிந்து பதவி வெறிபிடித்தமாடரேட்டர் கையால் நடந்த **பிஷப் அபிஷேக** ஆராதனை ஆசீர்வாதமாக இருக்குமா? மேலும் நீதிமன்றத்தை ஏமாற்றும் வகையில் பிஷப் அபிஷேக ஆராதனை ஏற்பாடுகளை **முன் தேதியிட்டு சினாட் மினிட்ஸ்ல்** சம்மததித்து காட்டியுள்ளதாக அறிகிறேன். அது எத்தனை வெட்கேடான விஷயம். இதற்கு ஒத்துழைப்பு தந்த மற்ற **பிஷப்மார்களுக்கு நீதிமன்றம் தண்டிக்கிறதோ இல்லையோ! - தேவ தண்டனை நிச்சயம்!.**

‘ பரிட்சை எழுதும் பிள்ளைகள், எழுதி முடித்த பிள்ளைகள் யாவருக்காகவும் மறக்காமல் ஜெபம் ஏறெடுக்கப்பட்டது.

‘ **பரீட்சை காலத்தில் பிள்ளைகள்** பரீட்சை எழுத புறப்படும் நேரத்தில் அவர்கள் காதில் போனை வைத்து என்னை ஜெபிக்க கேட்டுக்கொண்ட என் வாசக குடும்பங்களின் ஜெப நம்பிக்கையை அறிந்து தேவனைத் துதிக்கிறேன்.

‘ மணியாடர், இ-மெயில், ஆன்-லைன் மூலமாக எனக்கு காணிக்கை அனுப்பிய யாவருக்கும் என்னுடைய வாழ்த்துதல்களையும், நன்றியையும் அறிவிக்கிறேன்.

‘ ஒவ்வொரு வாரமும் ஏராளமான வாசகர்களின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே வருகிறது. புதிய வாசகர்களை வரவேற்கிறேன்.

‘ ஜாமக்காரன் வாசக குடும்பத்துக்காக நாங்கள் ஜெபித்தோம். பலருக்கு கர்த்தர் வாசகர்களின் ஆவிக்குரிய தீர்மானத்தின் அடிப்படையிலும் வசனத்துக்கு கீழ்ப்படிந்தாலும் அற்புத சுகத்தை அவர்களுக்கு கர்த்தர் அளித்ததை சாட்சி கடிதங்களின் மூலம் அறிந்தேன். கடிதம் எழுதி அறிவித்தவர்களுக்காகவும் தேவன் அவர்களுக்கு கொடுத்த சுகத்துக்காகவும், அவர்கள் குடும்பத்தில் கர்த்தர் செய்த அற்புதங்களுக்காகவும் தேவனை துதித்தோம். தொடர்ந்து ஜாமக்காரன் வாசகர்கள் குடும்பத்தினர் அனைவருக்காகவும் ஜெபிக்கிறேன். நீங்களும் தொடர்ந்து ஜெபியுங்கள்.

‘ **கர்த்தரின் இரண்டாம் வருகையில்** நாம் ஒருவரை ஒருவர் சந்திக்கும்வரை தேவ கிருபையும், சமாதானமும் நம் அனைவரோடும் இருப்பதாக. ஆமென்.

கர்த்தரின் உன்னத பணியில்

✍ **டாக்டர்.புஷ்பராஜ்**

# திரும்பிப் பார்க்கிறேன்

**NO. 2 A**

## ஊழியத்தில் பண விஷயத்தில் நான் அடைந்த அனுபவம்

1964 முதல் 1977ம் வருடம் வரை நான் என் ஊழியத்தில் 1672 சபைகளை சந்தித்து இருக்கிறேன். அத்தனை சபைகளின் கன்வென்ஷன்களிலும் பேசி இருக்கிறேன். இதில் 40 பெந்தேகோஸ்தே சபைகளிலும் மீதி மற்ற C.S.I. மார்தோமா, லூத்தரன் ஆகிய சபைகளிலும் அழைப்பு பெற்று பிரசங்கம் நிகழ்த்தியுள்ளேன். ஒவ்வொரு இடத்திலும் கூட்டம் ஏற்பாடு செய்தவர்கள் என்னை நடத்திய விதம், உபசரித்த விதம், எனக்கு பிரயாணசெலவு கொடுத்தது ஆகியவற்றில் உண்டான அனுபவங்கள் யாவும் இடத்துக்கு இடம் வித்தியாசப்பட்டது, அது நான் அடைந்த தனி அனுபவம் ஆகும்.

**குறிப்பிடும்படியான ஒரு நிகழ்ச்சியை இப்போது நான் திரும்பிப் பார்க்கிறேன்.**

பழைய நிகழ்ச்சிகளை ஞாபகப்படுத்திக்கொள்வதில் ஒரு இனிமை இருக்கத்தான் செய்கிறது. 1976ல் கேரள மாநிலத்தில குன்னங்குளம் என்ற ஒரு ஊரில் மிகப்பெரிய கூட்டம் ஒன்றில் பிரசங்கிக்க அழைக்கப்பட்டேன்.

கன்வென்ஷன் ஏற்பாடுகள் மிக சிறப்பாக அமைந்திருப்பதைக் நேரில் சென்றபோது கண்டேன். கூட்டத்தில் கலந்துகொண்ட ஜனங்களின் எண்ணிக்கை 7000 ஆகும். கூட்டம் மிக ஆசீர்வாதமாக இருந்தது. ஆவியானவர் வல்லமையாக கிரியை செய்தார்.

கூட்டத்தின் கடைசி நாள் இரவு பொருப்பாளர்கள் நன்றி கூறுகிறார்கள். என்னை வானளாவ புகழ்ந்தார்கள். அதில் நான் டாக்டர் வேலையை விட்டதையும், முழுநேர ஊழியத்துக்கு ஒப்புக்கொடுத்ததையும் பெரிய தியாகமாக குறிப்பிட்டு பேசினார்கள். இரண்டு பெரிய பிஷப்மார்கள் நான்கு நாட்கள் கூட்டத்திலும் கலந்துகொண்டார்கள்.

கடைசி நாள் கூட்டத்தில் காணிக்கை வரவின் அறிக்கையை மிக பெருமையாக அறிவித்தார்கள். எல்லா செலவும் போக இப்போது நம் கையில் மீதி தொகையாக ரூ. 14750/- மீந்துவிட்டது என்று கூறும்போது மக்கள் எத்தனை தாராளமாக கர்த்தருக்கென்று காணிக்கை கொடுக்க தொடங்கிவிட்டார்கள் என்று சந்தோஷத்தோடு கர்த்தரை துதித்தேன்.

கூட்டம் முடிந்தது. எனக்கு வாழ்த்துக்கூறி என்னை டாக்சியில் ஏற்றி 20 மைல் தொலைவில் உள்ள Trichur ரயில்வே ஸ்டேஷனுக்கு அனுப்பி வைத்தார்கள். காரில் நான் ஏறியபின் கூட்ட ஏற்பாடு செய்தவர்கள் என்னிடம் கூறியது, டாக்டர் திருச்சூர் வரை டாக்சிக்கு நீங்கள் பணம்

கொடுக்கவேண்டாம். நாங்களே கொடுத்துவிட்டோம் என்று கூறி ஒட்டப்பட்ட ஒரு கவரை என் கையில் கொடுத்து. இது உங்கள் ஊழியத்துக்கும், பிரயாணத்துக்கும் வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறி வழி அனுப்பி வைத்தார்கள்.

கவர் மொத்தமாகவும், கனமாகவும் இருந்தது. அந்த கவரில் இருந்த பணம் என்னையும் கனம்பெற செய்தது. கொஞ்ச தூரம் வரை அதாவது கோயமுத்தூர் வரை டாக்சியிலேயே சென்று பிறகு அங்கு இருந்து விரைவு ரயிலை பிடித்து சேலம் செல்ல தீர்மானித்தேன். **(ஷேர்) டாக்சி** போன்ற அந்த காரின் டிரைவரும் கணிசமான ஒரு தொகையை வாடகையாக என்னிடம் கேட்டார். கவரின் கனத்தை தட்டிப்பார்த்து தைரியத்தோடு அந்த தொகைக்கு ஒப்புக்கொண்டேன். காரில் வேறு நபர்கள் மூன்று பேர் அமர்ந்திருந்தனர்.

சில மணி நேரங்கள் கார் எங்கும் நிற்காமல் ஓடிக்கொண்டிருந்தது. கார் கோயமுத்தூர் அருகில் வந்துவிட்டது. அது ஒரு சிறு கிராமம், டிரைவர் காரை ஒரு ஓரமாக நிறுத்தி, சார், இது சிறிய கடையாக இருந்தாலும் இந்த கிராமத்தில் டீ நன்றாக இருக்கும் என்றார்.

இருவரும் டீயும் வடையும் சாப்பிட்டு பணத்தை நானே கொடுப்பதாக கூறினேன்.

என் பாக்கெட்டை பரிசோதித்ததில் சில்லரை காசுகள் இல்லாததால் கன்வென்ஷன் கூட்டத்தில் எனக்கு கொடுத்த கனமுள்ள கவரை உடைத்து அதிலிருந்த ரூபாயை எடுத்துதான் டீக்காக மாற்றவேண்டியதாயிற்று.

**கவர் பிரிக்கப்பட்டது.**

மற்றவர் காணாவண்ணம் நான் வேறு பக்கமாக திரும்பி வேகமாக கவரை உடைத்தேன். கத்தையாக ரூபாய் நோட்டுக்கள். ஆனால் அது அத்தனையும் **ஒரு ரூபாய்** நோட்டுகளாக இருந்தது.

முதலில் மொத்தம் எவ்வளவு ரூபாய் அந்தக் கவரில் இருக்கிறது என்பதை உடனே பார்க்க அந்த நேரத்தில் கலக்கத்தோடு என் மனம் ஆவல் கொண்டது. அவசர அவசரமாக ரூபாய்களை எண்ணினேன். அந்த கவரில் இருந்தது மொத்தம் **என்பது ரூபாய்கள்** மட்டுமே.

இரண்டு டீக்கு **அன்றைய காலத்தில்** 60 பைசாவாகும். ஒரு ரூபாய் கொடுத்து 60 பைசா போக மீதி 40 பைசா வாங்கினேன். இப்போது மீதி என் கையில் இருப்பது ரூ. 79-40 மட்டுமே.

இதில் ஜம்பமாக நான் செய்த கார் சவாரிக்கு கார் வாடகையாக நான் கொடுத்தது 75 ரூபாய். கோயமுத்தூர் சென்றபின் கொடுக்க வேண்டிய அந்த தொகையை அந்த இடத்திலேயே டிரைவர் கையில் கொடுத்து அவர் வாடகை கணக்கை தீர்த்தேன்.

இப்போது என் கையில் உள்ள மீதி பணம் 4-40 மாத்திரம். காரில் உட்கார்ந்த வண்ணம் மிகவும் யோசிக்க ஆரம்பித்தேன். **கோயமுத்தூரிலிருந்து சேலம்** போக பஸ் டிக்கட் எடுக்க பணம் இல்லாத நிலையில் இப்போது நான் **சேலம்** எப்படி செல்வேன். யாரிடம் போய் பணம் கேட்பது. இயற்கையிலேயே எனக்கு ஒரு குணம் உண்டு. நண்பர்களோடு நான் ஓட்டலுக்கு சென்றாலும் சாப்பிட்டதற்கான பில் நான்தான் கொடுப்பேன். அப்படி என் கையில் பணம் இல்லாவிட்டால் எத்தனை நண்பர்கள் கூப்பிட்டாலும் அவர்களோடு ஓட்டலுக்கு செல்லமாட்டேன்.

இப்போது நான் முழுநேர ஊழியத்துக்கு வந்தபின்னும் இந்த புத்தி இன்னும் என்னைவிட்டு போகவில்லை. இப்படிப்பட்ட சுபாவத்தில் இப்போது பண விஷயமாக அன்று கோயமுத்தூரில் யாரிடம் உதவி கேட்கவும் எனக்கு மனம் இல்லை. குறிப்பாக கோயமுத்தூரில் எனக்கு இனிய அன்பு சகோதரர்கள், ஊழியர்கள், வைத்திய நண்பர்கள் அநேகர் உண்டு. ஆனால் பணத்துக்காக யார் வாசற்படியும் மிதிக்க நான் இஷ்டப்படவில்லை.

சிந்தித்தவாறே நான் பயணித்த காரை கோயமுத்தூர் ரயில்வே ஸ்டேஷனுக்குவிட சொன்னேன். கோவை ஸ்டேஷனில் இறங்கி ஒரு பிளாட்பாரம் டிக்கட் வாங்கி அங்கு இருந்த பெஞ்ச் ஒன்றில் உட்கார்ந்தேன். சேலம் செல்ல பிரயாண டிக்கட் வாங்க பணம் இல்லை. சேலத்துக்கு டிக்கட் விலை அந்த காலத்தில் 10 ரூபாய் ஆகும். என்ன செய்வது ?

சேலத்துக்கு செல்ல மாலையில் ஐந்து விரைவு ரயில்கள் உண்டு. முதல் ரயில் வந்தது. எஞ்சினிலிருந்து கார்டுபெட்டி வரை இரண்டொரு முறை நடந்தேன். காரணம், என் வீடு சேலம் ஜங்ஷன் ரயில்வே ஸ்டேஷனுக்கு மிக அருகில் இருந்ததாலும் என் அப்பா ரயில்வேயில் வேலையில் இருந்ததாலும் எனக்கு அறிமுகமான **என்ஜின் டிரைவர். கார்டு, டிக்கட் பரிசோதகர்** யாராவது தென்படமாட்டார்களா? என்று தேடினேன்.

எனக்கு பழக்கப்பட்ட ரயில்வே ஊழியர்கள் சேலம் பிளாட்பாரத்தில் என்னை காணும் போதெல்லாம் பேச்சுத்துணைக்கு தங்களுடன் ரயிலில் வரும்படி என்னை கட்டாயப் படுத்துவார்கள். இதே ரயிலில் கோயமுத்தூர் வரை சென்று, இதே ரயிலில் உடனே திரும்பலாம் வாருங்கள் என்று அன்போடு என்னை ஒவ்வொரு முறையும் கூப்பிடுவார்கள்.

அதே நட்பின் முறையில் ஊழியர்கள் யாராவது ஓசியில் சேலம் செல்ல என்னை கூப்பிட மாட்டார்களா? என்று ஆவலோடு தேடினேன். என்னை அழைப்பார் யாருமில்லை. முதல் ரயில் சென்றுவிட்டது. அடுத்த ரயிலும் சென்றுவிட்டது. இனி இன்னும் 1-30 மணி நேரம் கழித்துதான் அடுத்த ரயில் வரும். அதுவரை ஒரு பெஞ்சின் மேல் அமர்ந்து என் ஜெபத்துக்காக எனக்கு வந்த கடிதங்கள் ஒன்றன்பின் ஒன்றாக கை வைத்து ஜெபித்துக்கொண்டிருந்தேன்.

அதில் பிரிக்கப்படாத சில (அப்போது அதன் விலை 20 பைசா) **இன்லேண்ட்** கடிதங்கள் இருந்தது. அதில் என் விலாசம் மலையாளத்தில் எழுதி இருந்ததால் மலையாளம் வாசிக்க தெரிந்தவர் கிடைக்கும் வரை அதை பிரிக்காமல் வைத்திருந்தேன். அந்த பிளாட்பாரத்தில் அமர்ந்திருந்தபோது சும்மாதானே இருக்கிறோம். கடிதங்களை எல்லாம் பிரித்து வைப்போமே என்று ஒவ்வொன்றாக பிரிக்க தொடங்கினேன்.

அதில் ஒரு (20 பைசா இன்லேண்ட்) கடிதத்தில் இருந்து மடிக்கப்பட்ட 20 ரூபாய் நோட்டு ஒன்று கண்டேன். சாதாரணமாக 25 பைசா கவரில் (இப்போது 5 ரூபாய்) சிலர் ரூபாய் வைத்து அனுப்புவதும் உண்டு. ஆனால் **இன்லேண்ட்** லட்டர் கடிதத்தில் 20 ரூபாய் நோட்டை வைக்க முடியாது. அப்படி வைப்பது அரசாங்கத்துக்கு விரோதமானது ஆகும்.

ஆனால் அன்று அந்த சூழ்நிலையில் அந்த தொகையை நான் கண்டவுடன் எனக்கு பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டது. அதை அனுப்பியது ஒரு சகோதரி, அதில் அவர் என்னிடம் வந்து ஜெபித்துக் கொண்டபின் தன் மகளின் வியாதி சுகமானதாகவும், அந்த மகளுக்கு டீச்சர் பயிற்சியில் இடமும் கிடைத்ததாகவும் கூறி 20 ரூபாய் நன்றி காணிக்கையாக அந்த கவரில் வைத்து அனுப்புவதாக அந்த கடிதத்தில் எழுதியிருந்தார்.

அந்த கடிதம் மலையாளத்தில் எழுதியிருந்தது. எனக்கு மலையாளம் வாசிக்கத் தெரியாது. அப்போதே அக்கடிதத்தின் விவரம் அறிய ஆவல்கொண்டு ஸ்டேஷனில் டீ விற்றுக்கொண்டிருந்த மலையாளி ஒருவனிடம் கடிதத்தை காட்டி படிக்கச் சொன்னேன். அதை அவன் படித்து முடிக்க 20 நிமிடங்கள் எடுத்துக்கொண்டு அவனும் என் பொறுமையை சோதித்தான். அந்த கடிதத்தின் விபரம்அறிந்தவுடன் அந்த சகோதரிக்காக ஜெபித்தேன். கர்த்தரை ஸ்தோத்தரித்தேன்.

**நெருக்கத்திலே நீ கூப்பிட்டாய் நான் உன்னை தப்புவித்தேன்..... மறைவிடத்தில் இருந்து உனக்கு உத்தரவு அருளினேன்.** சங் 8:17.

உடனே அந்த பணத்தை எடுத்துக்கொண்டு ஓட்டலுக்கு சென்று நன்றாக வயிரார சாப்பிட்டேன். அதன்பின் சேலத்துக்கு டிக்கட் வாங்கி குற்ற உணர்வு இல்லாமல் ரயிலில் ஏறி வீடுவந்து சேர்ந்தேன்.

## பலவிதமான அனுபவங்கள்

சில இடங்களில் உள்ளவர்கள் சபைக்கு பணம் திரட்டத்தான் பிரபல செய்தியாளர்களை கன்வென்ஷனுக்கு அழைக்கிறார்களே தவிர. சபையின் உயிர்மீட்சி உண்டாக்க வேண்டுமே என்பது அவர்களின் நோக்கம் அல்ல.

இந்த சம்பவம் நடந்த இடத்தில் அந்த கூட்டத்தின் ஏற்பாடுகளின் பந்தலுக்கும். மேடைக்கு. வால் போஸ்டருக்கு, டியூப் லைட், மைக்செட் இவைகளுக்கு பல ஆயிரம் ரூபாய் செலவு செய்வார்கள். கூட்டத்தில் பிரசங்கம் செய்ய வரும் ஊழியர்களிடம் மாத்திரம் இப்படி சிக்னம் பிடிப்பது எந்த விதத்தில் மேன்மையாகும்.

நான் என் டாக்டர் தொழிலை 1976ம் வருடம்தான் நிறுத்தினேன். அதுவரை எந்த கன்வென்ஷனிலும் பேச சென்றாலும் அவர்களிடம் பயண செலவுக்குகூட பணம் வாங்க மாட்டேன். **முழுநேர ஊழியத்துக்கு** வந்தபின்தான் பிரயான செலவைமட்டும் அவர்களாக எனக்கு கொடுத்தால் மட்டும் வாங்கிக்கொள்வேன். யாரிடமும் என் பயண டிக்கட் செலவை சொல்லவே மாட்டேன். அவர்களாக கொடுப்பதை வாங்கிக்கொள்வேன்.

சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்கு சுவிசேஷத்தினாலே பிழைப்பு உணடாக வேண்டும் என்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார். கொரி. 9:14

நாம் **ஊழியக்காரரை** மதிக்க கற்றுக்கொள்ளவேண்டும். நம் இயேசு சுவாமியும் ஊழியக்காரரை ஆசீர்வதித்து அந்த ஊழியக்காரர்களிடம் இயேசு கிறிஸ்து கூறும்போது **உங்களை ஏற்றுக்கொள்கிறவர்கள்** என்னை ஏற்றுக்கொண்டார்கள் என்றார்.

சீஷன் என்னும் நாமத்தின் நிமித்தம்.... கொடுக்கிறவன் அதன் பலனை அடையாமல் போகான். மத்.10:24 என்றார்.

பவுல் கூறுகிறார் **பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவி செய்யுங்கள்.** ரோ. 12:13 என்றார்.

மேலும் உபதேசிக்கப்படுகிறவன் **உபதேசிக்கிறவனுக்கு** தன் சகல நன்மைகளிலும் பகிர்ந்துகொடுக்கக்கடவன். கலா. 6:6 என்று வேதம் கூறுகிறது.

இப்படி பல அனுபவங்கள் என் ஊழியத்தில் உண்டு. பண விஷயத்தில் இந்த ஒரு அனுபவத்தை மட்டும் இப்போதைக்கு நான் பகிர்ந்துகொள்கிறேன்.

அந்த அனுபவத்துக்குபின் இப்போதெல்லாம் நான் எந்த ஊருக்கு நான் பயணித்தாலும் **போகவர** தேவையான பணம் கையில் எடுத்துக்கொள்கிறேன். ஆகவே பயமில்லாமல் மற்றவர்களிடம் பணத்தை எதிர்பாக்காமல் பல ஊழியங்களுக்காக போய் வருகிறேன். இன்னொரு விஷயம் இந்த சம்பவத்துக்குபின் இரண்டு வருடம் கழித்து, மறுபடியும் அந்த குறிப்பிட்ட இடத்துக்கே கன்வென்ஷனில் பேச அழைக்கப்பட்டேன். அவர்கள் அழைப்பை நான் மறுக்கவில்லை. அந்த கூட்டத்திலும் நான் பேசும்போது சில வருடங்களுக்குமுன் இதே ஊரில் அனுபவபட்ட அந்த பண கஷ்டத்தைபற்றி மறைமுகமாகக்கூட எதையும் என் பிரசங்கத்தில் நான் குறிப்பிடவில்லை. அப்படி கூறகூடாது என்று ஆண்டவர் என்னை உணர்த்தியிருந்தார். ஆனால் இந்த முறையும் அந்த கூட்டம் முடிவில் பண விஷயத்தில் ஏறக்குறைய அதே அளவுதான் எனக்கு TA கொடுத்தார்கள். அதே அளவு தொகைதான் வழக்கமாக எல்லா ஊழியக்காரர்களுக்கு கொடுப்பது என்று முன்னமே அவர்கள் தீர்மானித்து இருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் இந்த முறை நானும் **டாக்சியில் பிரயாணம்** செய்யாமல் கொடுத்த பணத்துக்கு ஏற்றவாறு ரயிலிலேயே ஒழுங்காக பிரயானம் செய்து வீடு வந்து சேர்ந்தேன்.

ஊழியம் என்பது **பிழைப்பு** அல்ல. அது ஒரு **அழைப்பு** என்பதை எப்போதும் நான் என் ஞாபகத்துக்கு கொண்டு வருவேன். இந்த சம்பவத்தை நான் எழுதுகிறதால் மறைமுகமாக நான் பணம் கேட்கிறேன் என்று தயவுசெய்து தப்பு கணக்கு போட்டுவிடாதீர்கள். பண விஷயத்தில் நான் எப்படிப்பட்டவன் என்பது ஜாமக்காரன் வாசகர்கள் அறிவீர்கள்.

## டிரைபல் மிஷன் ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் தேவை:

**டிரைபல் மிஷன் ஆஸ்பத்திரியில் டாக்டராக பணி செய்ய விருப்பம் உள்ளவர்கள் கீழே உள்ள விலாசத்திற்கு உங்கள்** Bio Data **அனுப்பவும்:**

# WANTED

For a 80 bedded Rural Mission hospital in a panoramic setting at Anaikatty, [ 30 Kms from Coimbatore ] **committed Christian doctors in the following specialty ;**

1. General Medicine
2. Paediatrics
3. General Surgery
4. Gynaecology

**Also required staff nurses**
**BSC / GNM / ANM**
**Salary Negotiable**
**Quarters Available**

Retired persons can also apply

Apply to

bethany MEDICAL CENTRE
compassion | concern | care

**The Medical Superintendent**
Bethany Medical Centre, Anaikatty, Coimbatore – 641 108. **Tamil Nadu**
**Email:** bmc_anaikatty@rediffmail.com | **Phone:** 0422 – 2657025

**NO. 2 B**

## கர்த்தருடைய ஊழியத்தை அசதியாய் செய்கிறவன் சபிக்கப்பட்டவன். எரே. 48:10,நீதி 18:9.

பல வருடங்களுக்கு முன் என் ஊழியத்தில் பெரியஅனுபவம்உள்ள சில பிரசங்கிமார் களோடு நெருங்கி பழகும் வாய்ப்பு. இணைந்து ஊழியம் செய்யும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. கர்த்தரோடு ஒன்றாக நெருங்கி ஜீவிக்கும் அவர்களின் ஊழியத்தில் அவர்களிடம் நான் கண்ட சில பலவீனங்கள் என் மனதை மிகவும் வேதனைபடுத்தியதுண்டு.

அந்த பலவீனங்களில் ஒன்று. இவர்கள்தாங்கள் பிரசங்கிக்க ஒப்புக்கொண்டு கூட்டங்களுக்கு **கடைசி நேரத்தில்** வரஇயலாது என்று (Telegram) தந்தி கொடுத்துவிட்டு அந்த கூட்டங்களுக்கு போகமாட்டார்கள். அது மட்டுமல்ல, **அதே தேதியில்** வேறு **பெரிய கூட்டங்களுக்கு** பிரசங்கிக்க போய்விடுவது இவர்கள் வழக்கமாக இருந்தது. **சிறிய கூட்டம். சிறிய கிராமம்** என்ற அடிப்படையில் ஊழியம் செய்வது என்ற அலட்சியம் அவர்களில் இருந்ததை கவனித்தேன். சிறிய சபை கூட்டம் என்றால் **காணிக்கை** கொஞ்சமாக கொடுப்பார்கள், பெரிய சபை பெரிய கூட்டம் என்றால் **பெரிய தொகை** கொடுப்பதால் ஏற்கனவே தேதி கொடுத்த **சின்ன சபைக்**கு வரமுடியவில்லை என்று கடைசி நிமிடத்தில் அறிவிக்கும் மிக தவறான பழக்கம் சில ஊழியர்களிடம் கண்டேன்.

ஆனால் உண்மையாகவே கடைசி நேரத்தில் வர இயலாது போகும் சில சந்தர்பங்கள் உண்டு. **வியாதிகள். விபத்துக்கள்** என்று பலருக்கும் ஏற்படுவது உண்டு. ஆனால் அதையே வழக்கமாக்கிகொள்ளும் பழக்கம் வெறுப்புக்குறியதாகும். அது ஒழுங்கீனமும் சாட்சி இல்லாததும் ஆகும்.

அதற்கு காரணம், எந்த இடத்தில் ஊழியத்துக்கு நாம் ஒப்புக்கொண்டோமோ அந்த இடத்தின் ஊழியத்துக்காக தினசரி ஜெபத்தில் நம்மை ஒவ்வொரு நாளும் ஆயத்தப்படுத்தாமல் கடைசி நேரத்தில் அந்த ஊழியத்தை குறித்து யோசிப்பதுவேயாகும்.

மேலும் நான் மேலே கூறியபடி கூட்டங்கள் நடத்தப்படும் **இடம்**. ஆட்கள் சேரும் **எண்ணிக்கை** கூட்டத்துக்கு அழைப்பு அனுப்பியவர்களின் **ஏழ்மை நிலை** ஆகிய இது போன்ற காரியங்களின் அடிப்படையில் ஊழியத்துக்கு செல்பவர்களுக்குதான் இந்த அலட்சிய மனப்பான்மை வருகிறது. சிலர் பணம் அதிகம் கொடுக்கும் கூட்டத்துக்கு தேதி கொடுக்க முன்னுரிமை அளிப்பது இந்த சிந்தை பிரசங்கமார்களுக்கு உண்டாவது மிகவும் தவறானது ஆகும்.

❖ நான் 1964ம் வருடமே ஊழியத்தில் இறங்கினேன். அப்போது மூன்று இடங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளில் எனக்கு பொறுப்பு இருந்தது. இரண்டு இடங்களில் சொந்தமாக கிளீனிக் வைத்து நடத்தினேன். அதோடு ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு மாதமும் மலை ஊழியமும் செய்துகொண்டு இப்படியாக இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில்உள்ள கிராமங்களுக்கு பிரசங்கித்து சபைகளின் ஆவிக்குரிய பொதுக்கூட்டங்களுக்கும் பிரசங்கிக்க போய் வருவேன்.

**ஊழியத்தின் ஒழுங்கு** (Discipline)

ஆனால் இதுவரை நான் எந்த கூட்டத்துக்கும் அல்லது கிராம ஊழியத்துக்கும் அறிவித்தபடி குறிப்பிட்ட நேரத்தில் **போகாமல் இருந்ததில்லை. தாமதித்தும்** போனது இல்லை. எங்கு கூட்டங்கள் நடற்தாலும் அந்த கூட்ட நாட்களில் **நான் வியாதிபட்டதினால்** ஒரு கூட்டமும் **தடையானதும**ில்லை.

இது என் சமார்த்தியத்தினால் ஆனதல்ல. வெறும் தேவ கிருபை மட்டுமே. இதற்கு எனக்குள் இருந்த **ஊழிய வாஞ்சையும் ஊழிய பாரமும்** மற்றொரு காரணமாகும். அதனால்தான் கர்த்தரும் என்னை இந்த ஊழியத்தில் இந்த அளவு **என்னை மேன்மைபடுத்தி** உயர்த்தி இருக்கிறார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

வேதம் கூறுவதாவது :

**என்னை கனம் பண்ணுகிறவனை நான் கனம் பண்ணுவேன். என்னை அசட்டை பண்ணுபவர்கள் கனயீனம் அடைவார்கள்.** 1 சாமு 2:30.

## ஊழியத்தில் எனக்கு ஏற்பட்ட மற்றொரு புதிய அனுபவம்

இந்தியாவில் கேரளா மாநிலத்தில் **மலப்புரம்** என்ற மாவட்டத்தில் **மணிமூளி** என்ற ஊரில் என் ஊழியம் நடந்துகொண்டு இருந்தது. அன்று அங்கு நடந்த கூட்டத்தின் கடைசி நாள் இரவு ஆகும். அந்த கூட்டத்தை முடித்து நான் வேறு ஊரில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் பிரசங்கிக்க உடனே பயணப்படவேண்டும். குருவானவர் கைகளை பிசைந்தபடி குழப்பத்தில் இருப்பதை கவனித்தேன்.

கூட்டம் முடிந்தவுடன் நான் போக வேண்டியுள்ள ஊர் 400 மைலுக்கு அப்பால் உள்ளது. கேரளாவிலேயே மற்றொரு பகுதியில் உள்ள அந்த குறிப்பிட்ட ஊருக்கு அடுத்த நாள் **மதியத்துக்குள்** நான் போய் சேர வேண்டும். மறு நாள் மதியம் நான் அங்கு பிரசங்கம் செய்ய வேண்டும். அதற்கான பிரயாண ஏற்பாடுகள் ஏற்கனவே செய்துவிட்டதாக அந்த குறிப்பிட்ட இரவு பிரசங்கித்த அந்த சபை போதகர்கள் எனக்கு அறிவித்தார்கள். ஆனால் இப்போது பிரயாண நிலைமையில் பெரும் தடை ஏற்பட்டது. கேரளா கவர்ன்மெண்ட் **பஸ்கள் ஸ்டிரைக்** என்பதாக திடீர் என்று அறிவித்துவிட்டனர். எனக்காக ரிசர்வ் செய்த பஸ் டிக்கட் வேஸ்ட் ஆகிப்போனது.

டாக்ஸிகளும் ஸ்டிரைக். ரோட்டில் எந்த வாகனம் சென்றாலும் கல் எரிகிறார்கள். இதனிமித்தம் அந்த சபையில் சொந்தமாக கார் வைத்திருப்பர்களும் என்னை தங்கள் கார்களில் **ஏற்றி அனுப்ப** தயங்கினார்கள். இந்த சூழ்நிலையில்தான் **ஆயர்களும்** குழம்பியபடி நின்றார்கள்.

போதகர்கள் லாரியிலாவது என்னை ஏற்றி அனுப்பிவிட தீர்மானித்தார்கள். ஆனால் ஒரு லாரியும் அந்த நேரத்தில் வரவில்லை. ரோடு வெறிச்சோடி கிடந்தது.

அப்போது தமிழ் நாட்டில் (ஊட்டி) **கூடலூரிலிருந்து** மூங்கில் ஏற்றிக்கொண்டுவரும் லாரி ஒன்று வந்தது. கேரளாவில் நடந்துகொண்டிருக்கும் ஸ்டிரைக்கை அவர்கள் அறியாமல் வேகமாக லாரியை ஓட்டி வந்தார்கள்.

அந்த லாரியை கண்டவுடன் போதகர்கள் கை காட்டினார்கள். குருவானவர்கள் **அங்கியோடு** கை காண்பித்ததால் டிரைவர் வண்டியை உடனே நிறுத்தினார். அவரிடம் என்னைப்பற்றிய விவரம் கூறி. என்னை அந்த லாரியில் ஏற்றி அனுப்பிவிட்டார்கள். எப்படியோ அவர்கள் வேலை முடிந்துவிட்டது. அதன்பிறகு நான்பட்ட அவதி எனக்கல்லவா தெரியும்!.

லாரி ஒரு மணிநேரம் எங்கும் நிற்காமல் ஓடிக்கொண்டிருந்தது. வழியெல்லாம் ஸ்ட்ரைக்செய்யும் சிறு சிறு கும்பல் எங்கள் லாரியை கண்டு சத்தம்போட்டார்கள். **பெருந்தல்மண்** என்ற ஊர் வந்தவுடன் ஜனங்கள் எங்கள் லாரியை போகவிடாமல் தடுத்து லாரியை சுற்றி நின்றுவிட்டார்கள். வேறு வழியில்லாமல் டிரைவர் என்னை இறங்க சொன்னார். நானும் இறங்கிவிட்டேன். டிரைவர் லாரியை ஒரு ஓரமாக நிறுத்திவிட்டு ஸ்டிரைக் தீரும்வரை தான் இங்கேயே இருக்கபோவதாகவும், என்னை பஸ் ஸ்டாண்ட் போகும்படியும் கேட்டுக்கொண்டார்.

பஸ் ஸ்டாண்ட் அருகே நின்று டாக்ஸி டிரைவர்களிடம் விசாரித்தேன். ஸ்டிரைக் சமயத்தில் டாக்ஸி டிரைவர்கள் யாரும் வாடகைக்கு வர மாட்டார்கள் என்றும், அங்கே லாட்ஜில் இரவு தங்கி செல்லும்படி அங்குள்ள ஜனங்களும் எனக்கு ஆலோசனை கொடுத்தார்கள்.

அடுத்த நாள் மதியம் நான் மற்ற ஊரில் கூட்டத்தில் பேசியாகவேண்டும். எப்படி அந்த ஊரில் இரவு தங்குவது. யோசித்தேன். அங்கிருந்து 40வது மைல் தூரத்தில் ரயில்வே ஸ்டேசன் இருப்பதாகவும் **ரயில்கள் மட்டும்** இயங்கிக்கொண்டிருப்பதாகவும் அறிந்தேன்.

அந்த 40 மைலும் நடந்தே சென்றுவிட துணிந்தேன். ஜனங்களில் பலர் அந்த யோசனையை தடுத்தனர், எச்சரித்தனர். ஆனால் நானோ பெட்டியை தூக்கிக்கொண்டு இரவு 12-10 மணிக்கு தனியாக நடக்க ஆரம்பித்தேன். என்னோடு வேறு யாரும் வர துணியவில்லை. 1 மணி நேரம் நான் தனியாக **தார் ரோட்டின்** வழியே நடந்துகொண்டேயிருந்தேன். தொண்டை வரண்டுபோக ஆரம்பித்தது, அந்த விளக்கில்லாத இருட்டில் யாரிடம் தண்ணீர் கேட்கமுடியும்?.

வழியே சிறு ஊர்கள் இடைப்பட்டன. ஒரு ஊரில்கூட கடையோ வீடோ திறக்கப்படவில்லை. தொடர்ந்து நடந்துகொண்டே இருந்தேன். எங்கும் ஜன நடமாட்டமே இல்லை. காட்டின் ஊடே சென்ற தார்ரோடு வழியாவே நடந்தேன். மிருகங்கள் பயமும் எனக்கு உண்டானது. எனக்கு பயம் வரும்போதெல்லாம் சத்தமாக தேவனை துதித்து பாடுவேன். எத்தனை சத்தம் போட்டு பாடியும் எந்த கிராமத்திலும் யாருடைய கதவும் திறக்கப்படவில்லை. **காடுகள்** வழியாக தார் ரோடு போன பாதையில் தொடர்ந்து நடந்துக்கொண்டே இருந்தேன்.

அப்போது **போலீஸ் ஜீப்கள்** வரிசையாக ஒன்றன்பின் ஒன்றாக என்னை கடந்து சென்று கொண்டிருந்தன. கை நீட்டினேன். யாரும் நிற்கவில்லை. 4 ஜீப்கள் என்னை கடந்துசென்றது. 5வது **போலீஸ் வேன்** என்னை கடந்துசென்று தடீரென்று பிரேக் போட்டு, அந்த போலீஸ் வேன் பின் பக்கமாகவே நான் இருக்கும்இடம் வரை வந்து நின்றது.

போலீஸ் வேனின் ஹெட் லைட் இரண்டையும் என்மேல் படும்படி வேன் நிறுத்தியிருந்தார்கள். வேனின் முன்பக்கம் இருந்து போலீஸ் அதிகாரி ஒருவர் இறங்கினார்.

நீ யார்? எங்கிருந்து எங்கு செல்கிறாய்? உன்னை பார்த்தால் எனக்கு சந்தேகமாக இருக்கிறது. என்று மலையாள பாஷையில் இடைவெளியில்லாமல் பேசினார்.

உன் பெட்டியை பரிசோதிக்க வேண்டும் என்றார். பயங்கர இருட்டில் பேண்டும் டையும் அணிந்துகொண்டு டிப் டாப்பாக இருந்த நான், கையில் ஒரு சூட்கேஸுடன், அந்த இருட்டில் செல்வது அவரின் சந்தேகத்தை பன்மடங்காக்கின.

உடனே நானும் பெட்டியை திறந்து காட்டினேன். ஒவ்வொரு சட்டையாக உதறிபார்த்தார். அப்போது என் பெட்டியில் என் பத்திரிகையான நியூஸ் லட்டர் (NEWS LETTER) என்பது **ஜாமக்காரனின்** பழைய பெயர் ஆகும். அதை **கடிதமும்,செய்தியும்** என்று தமிழில் எழுதப்பட்டிருக்கும். என் பத்திரிகையில் எழுதியிருந்த என் ஊழிய விவரங்களையும் அதன் தேதிகளையும் வரிசையாக அதில் (Program) எழுதியிருந்தேன்.

உடனே அதை அந்த போலீஸ் அதிகாரிக்கு காட்டி அடுத்த நாள் நான் போக வேண்டிய இடத்தையும் நேரத்தையும் பத்திரிக்கையில் அச்சிட்டு இருப்பதை சுட்டிக்காண்பித்து இந்த அவசரத்தால்தான் நான் நடந்துபோக துணிந்தேன் என்று விளக்கி கூறினேன். நான் மலையாளி அல்ல என்பதையும் அவர் அறிந்துக்கொண்டார்.

அதிகாரி நான் கூறியதை நம்பினார் என்றாலும் என்னை எச்சரித்து பேசிவிட்டு, யாரும் கேரளத்தில் இதுவரை தனியாக இப்படி சென்றதில்லை என்றார். சரி, என்ன செய்வதாக உத்தேசம் என்றார்!. ரயிலை எப்படியாவது பிடித்து மறுநாள் மதியத்துக்குள் கூட்டம் நடக்கும் இடம் சேர வேண்டும் அவ்வளவுதான் என்றேன்.

அதற்கு அவர் உனக்கென்ன பயத்தியமா? ரயில்வே ஸ்டேசன் இங்கிருந்து 33மைல் எப்படி போவாய். சரி, சரி என் போலீஸ் வேனிலே ஏறு என்று கூறி லாரியின் பின்பக்கம் கதவை திறந்து ஏறிக்கொள்ள சொன்னார். உள்ளே கைதிகள் விலங்கு மாட்டப்பட்டு வரிசையாக இடம் இல்லாத நிலையில் நெருங்கி உட்கார்ந்திருந்தார்கள். **இரண்டு கைதிகளை** நகர்த்தி அவர்களுக்கு இடையில என்னை உட்கார வைத்தார்கள் வண்டி புறப்பட்டது. கைதிகள் தூங்கியவாறு என்மேல் விழுந்தார்கள். அவர்களையும் தாங்கியபடி என் பயணம் தொடர்ந்தது. என் நிலையை யோசித்தேன். இந்த போலீஸ்காரர்கள் இனிமேல் என்னை என்ன செய்வார்கள் என்று புரியவில்லை!. எப்படியும் மதியம் பேச வேண்டிய ஊழியம் பாதிக்கப்படகூடாது என்று கூடுதல் அங்கலாய்த்தேன்.

மூன்று மணி நேரம் வண்டி ஓடிக்கொண்டே இருந்தது. கைதிகளிடம் பேச்சு கொடுக்க நினைத்தேன். வண்டிக்குள் லைட் இல்லை. ஆதலால் ஒருவர் முகம் மற்றவருக்கு தெரியவில்லை. நானும் மௌனமாக ஜெபித்துக்கொண்டே வந்தேன்.

மறுநான் விடியற்காலை நேரம் வண்டி எங்கோ ஒரு இடத்தில் நின்றது. சற்று நேரம் அமைதி , கைதிகள் யாரும் வண்டி நின்ற இடம் எது என்று அறிய வேனில் இருந்தபடியே வலை கம்பிகள் உள்ள அந்த ஜன்னலின் வழியாக எட்டிபார்த்துக்கொண்டிருந்தனர்.

## ரொட்டியும் - டீயும்

கொஞ்ச நேரம் கழித்து வண்டி கதவு திறக்கப்பட்டது. இரண்டு மூன்று போலீஸ் கான்ஸ்டபிள்கள் வண்டியில் உள்ள எல்லா கைதிகளுக்கும் ரொட்டியும் டீயும் கொடுத்தார்கள்.

இருட்டில் என் கைக்கும் ஒரு ரொட்டியும் டீயும் வந்து சேர்ந்தது. பல மைல்கள் நான் நடந்ததால் உண்டான களைப்பு, தாகம், பசி இவை யாவும் ஒன்று சேர்ந்ததால் கொடுத்த அந்த உணவை பல் விளக்காமலே பசி என்னை சாப்பிட வைத்தது.

மறுபடியும் வண்டி புறப்பட்டு சென்றுக்கொண்டிருந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் நன்றாக பொழுது விடிந்துவிட்டது. காலை சுமார் மணி 7-30 இருக்கும் வண்டி குலுங்கியபடி எந்த கட்டிடத்துக்குள்ளேயோ செல்ல முயற்சித்தது. கட்டிடத்துக்குமுன் வளைவாக ஒரு போர்டு மலையாளத்தில் எழுதப்பட்டிருந்தது. பக்கத்தில் உள்ள கைதிகள் அதை வாசித்தபடி **எர்ணாக்குளம்** போலீஸ் ஸ்டேசன் வந்துவிட்டோம் என்றார்கள்.

அப்போதுதான் என் அருகே உள்ள கைதி என்னை பார்தது **நீ என்ன கேஸ் என்றான்.** நான் பதில் கூறும்முன் போலீஸ் லாரியின் கதவு திறக்கப்பட்டது.

வெளியே போலீஸ்காரர்கள் வரிசையாக நின்று கைதிகளை இறங்க சொல்லி ஒவ்வொருவரையும் எண்ணி போலீஸ் ஸ்டேஷனில் உள்ள லர்ககப்புக்குள் தள்ளினார்கள். வரிசையில் நானும் இறங்கினேன். என்னை அவர்கள் தள்ளவில்லை. ஆனால் தள்ளுவதற்குள் நானே சென்றுவிட எண்ணி வேனைவிட்டு இறங்கி தயக்கத்தோடு சுற்றும் முற்றும் பார்த்தேன்.

அப்போது

அங்கு ஸ்டேஷனில் உள்ளே இருந்து சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஒருவர் வெளியே வந்தார்.

தயங்கிபடி நின்றவாறே மெதுவாக வந்துக்கொண்டிருந்த என்னை பார்த்து, யார் நீங்கள் இந்த வேனில் வந்தவரா? என்றார்.

ஆம். நடுவழியில் நடந்து வந்துக்கொண்டிருந்த என்னை வண்டியில் வந்த ஒரு இன்ஸ்பெக்டர் வேனில் ஏற சொன்னார். ஏறினேன் என்றேன். இப்போது நான் உள்ளே போகவா? வெளியே போகவா என்று எனக்கு புரியவில்லை என்றேன்.

திடீரென்று அந்த சர்க்கிள் இன்ஸ்பெக்டர் உங்கள் பெயர் என்ன? உங்கனை எங்கோ பார்த்தது போல இருக்கிறது என்றார்!.

என் பெயரை கூறியதும். நீங்கள்தானே கன்வென்ஷனில் பிரசங்கிப்பது என்றார். ஆம் என்றேன். மிக மரியாதையுடன் நீங்கள் எப்படி இந்த கைதிகளுடன்! என்றார்.

நான் ஒரு **சந்தேக கேஸ்** என்று கூறி நடந்த முழு விவரத்தையும் அவரிடம் கூறினேன். உடனே அவர் ஐயா கேரளத்தில் நடந்த உங்கள் கூட்டத்தில் கலந்கொண்ட **என் மகளுக்கு** பூரண சுகம் கிடைத்தது. கூட்டத்தில் கடைசி நாள் என் மகள் தலையில் கையை வைத்து தாங்கள் ஜெபித்ததாக என் வீட்டில் உள்ளவர்கள் கூறினார்கள். என் மகனும் உங்கள் கூட்டத்தில்தான் இரட்சிக்கப்பட்டான். உங்கள் கூட்டம் கேரளாவில் எங்கு நடந்தாலும் குடும்பமாக யாவரும் பங்குகொள்வார்கள் என்றார்.

உங்கள் (NEWS LETTER) ஜாமக்காரன் பத்திரிகை எங்கள் வீட்டில் தவறாமல் வருகிறது. அதில் டிசம்பர் மாதம் கிறிஸ்மஸ் இதழில் உங்கள் போட்டோவை பார்த்திருக்கிறேன் என்றார்.

என் போலீஸ் வேலையினிமித்தம் உங்கள் கூட்டங்களில் பங்குகெள்ள எனக்கு ஆவல் இருந்தாலும் ஒரு முறை கூட உங்கள் கூட்டத்தில் நான் பங்குகொள்ள சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்று கூறி ஸ்டேஷனுக்குள் என்னை அழைத்துபோய் அமர வைத்து நடுவழியில் என்னை ஏறச்சொன்ன அநத போலீஸ் அதிகாரியிடம் என்னை அறிமுகப்படுத்தினார்.

இப்போது அந்த அதிகாரி போலீஸ்க்குரிய அதிகார தோரனையை காட்டாமல் எனக்கு கை கொடுத்து என்னோடு குழைந்து மரியாதையோடு பேசினார். பிறகு அந்த சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அவர் வீட்டிற்கு வருந்தி அழைத்தார். நீங்கள் வந்தது அறிந்தால் என் குடும்பத்தினர் மிகவும் சந்தோஷப்படுவார்கள்.

நானோ மதியம் பேசவேண்டிய கூட்டத்துக்கு போக துடித்தேன். உடனே அவர் நீங்கள் வீட்டிற்கு சென்று இளைப்பாறுங்கள். **கோட்டயம்** வரை எங்கள் ஜீப் செல்கிறது அதில் உங்களை ஏற்றி அனுப்புகிறேன். அங்கிருந்து நீங்கள் செல்ல வேண்டிய ஊருக்கு பஸ்ஸில் செல்லலாம் என்றார்.

அவர் யோசனைக்கு உட்பட்டேன். அந்த வீட்டில் இராஜ உபசரிப்பு. சரீர களைப்பு நீங்க நன்றாக குளித்தேன். சாப்பாடு தயார் ஆகும்வரை சற்று படுத்து தூங்குங்கள் என்று என்னை அவர் குடும்பத்தினர் படுக்கவைத்தார்கள். இரவு முழுவதும் நடந்த களைப்பு, அதோடு கடந்த இரவு தூக்கமின்மை இவை யாவும் சேர்ந்து என்னை நன்றாக தூங்கச் செய்தது. போலீஸ்காரர் வீடு அல்லவா அதனால் பயமில்லாமல் தூங்கினேன்.

சாப்பாட்டு வேளை வந்தது. என்னோடு சேர்ந்து சாப்பிட ஆவல் கொண்ட அதிகாரி திடீரென்று பெரிய அதிகாரிகள் வந்துவிட்டதாலும். எங்கோ பெரிய ரகளை நடந்ததாலும் அதிகாரிகளுடன் உடனே சென்றுவிட்டார். இப்படிதான் என் கணவர் கூட்டத்துக்கு வர ஆவல் கொள்வார். கடைசியில் ஏதோ ஒரு வேலை வந்து உடனே போய்விடுவார் என்று தன் கணவரின் போலீஸ் உத்தியோகத்தைப்பற்றி கூறி அவர் மனைவி சலித்துக்கொண்டார். நான் சாப்பிட்டு முடித்ததும் போலீஸ் ஜீப் வந்தது. அதில் துப்பாக்கி ஏந்தி மூன்று கான்ஸ்டபிள்களும், ஒரு சப் இன்ஸ்பெக்டரும் இருந்தார்கள.

என் பெட்டியை ஒரு கான்ஸ்டபிள் எடுத்துக்கொண்டார். ஜீப்பில் ஏற அருகே வந்ததும் முன்பக்கம் அமர்ந்திருந்த சப்-இன்ஸ்பெக்டர் முன்பக்கம் இருந்து இறங்கி பின்பக்கம் கான்ஸ்டபிள்களிடம் போய் உட்கார்ந்துகொண்டார். முன் சீட்டில் நான் மட்டும்தான் இருந்தேன். இடம் இருக்கும்போது நீங்கள் ஏன் பின்னால் போய் உட்காரவேண்டும். இங்கு வந்து உட்காருங்கள் என்று சப்-இன்ஸ்பெக்டரை அழைத்தேன். ஆனால் அவரோ நான் வரக்கூடாது சார். சர்க்கில் இன்ஸ்பெக்டர் முன் சீட்டில் உங்களை உட்கார வைத்து சகல மரியாதையுடன் நடத்தும்படி எங்களுக்கு கட்டளையிட்டுள்ளார் என்றார்.

கடந்த இரவு வரும்வழியில் நான் **போலீஸ் வேனில்** கைதிகளுடன் சேர்ந்துவந்த அந்த **அவமானத்தை** மாற்றி, என் கர்த்தர் இப்போது **கௌரவமாக** என்னை நடத்தி அதை ஈடு செய்கிறார் என்பதை உணர்ந்தேன்.

ஜீப் கோட்டாயம் பஸ் ஸ்டாண்டை கடந்து போய்கொண்டிருந்தது. அப்போது நான் என்னை இங்கேயே இறக்கிவிட்டால் நான் பஸ்ஸில் ஏரி செல்ல வசதியாக இருக்கும் என்றேன். ஆனால் வண்டியை ஓட்டிய போலீஸ்காரர் கூறினார், நீங்கள் எதுவரை போகவேண்டுமோ, அதுவரை கொண்டுபோய் விட்டுவிட்டு மற்ற வேலைகளை பாருங்கள் என்று பெரிய ஐய்யா(சர்க்கிள் இன்ஸ்பெக்டர்) கூறியிருக்கிறார் என்றார்.

நான் சேர வேண்டிய ஊர் வந்தது. அப்போது மதியம் மணி 2-30 பகல் **வேதபாட கூட்டம்** கன்வென்ஷன் பந்தலில் நடந்துகொண்டு இருந்தது அந்த இடத்துக்கருகே போலீஸ் வந்து நின்றது.

பாட்டு நேரம் அது. ஆகவே ஜனங்கள் கைதட்டி பாடிக்கொண்டிருக்க, என் வரவுக்காக போதகர்களும், மற்றவர்களும் ஆவலோடு வெளியில் நின்றவாரே காத்திருந்தார்கள்.

ஜீப் அவர்கள் அருகே நின்றது. முதலில் சப்-இன்ஸ்பெக்டரும், கான்ஸ்டபிள்களும் இறங்கி தன் துப்பாக்கிளை ஏந்தி எனக்கு போலீஸ் சல்யூட் அடித்து மரியாதை செலுத்த, நான் **மந்திரி இறங்குவது**போல மெதுவாக இறங்கி வந்ததை பார்த்த ஜனங்களுக்கும் என்னை வரவேற்க வந்த போதகர்களுக்கும், மற்றவர்களும் ஆச்சரியப்பட்டு பார்த்துக்கொண்டிருந்தார்கள். போலீஸ் பாதுகாப்புடன் **கிறிஸ்துவின் தூதுவராக** (Ambassador)போல பந்தலுக்குள் நான் அட்டகாசமாக வாழ்க்கையில் முதல் முறையாக போலீஸ் மரியாதையுடன் பிரவேசித்தேன். கர்த்தருடைய ஊழியனுக்கு எப்படிப்பட்ட பாதுகாப்பு கிடைத்தது என்பதை கவனித்தீர்களா? எப்படிபட்ட **வரவேற்பு, வழிநடத்துதல்** பார்த்தீர்களா?.



அன்பானவர்களே, **நாம் கர்த்தரின் ஊழியத்தில் காட்டும் அக்கரை எப்போதும் வீண் போவதில்லை. தன் ஊழியக்காரனை தன் கண்மணியை போல் பாதுகாக்கிற தேவன் எப்போதும் உயிரோடிருக்கிறார். நீ போகும் இடமெல்லாம் என் தேவனாகிய கர்த்தர் உன்னுடையே இருக்கிறார்.** யோசு 1:9

**உங்கள் கிரியைகளையும் நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காக காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்து விடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவர் அல்லவே.** எபி. 6:10

கிறிஸ்துவுக்காக நாம் அனுபவிக்கும் ஒவ்வொரு வேதனைக்கும், அவமானத்துக்கும் ஏற்ற பலன் கர்த்தர் நிச்சயமாக நமக்கு தருவார்.

**ஊழியஞ் செய்கிறவனுக்கும் ஊழியம் செய்யாதவனுக்கும் இருக்கிற வித்தியாசத்தை நீங்கள் காண்பீர்கள்**! 3:28

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## E-MAIL

**E-Mail அனுப்புபவர்கள் தயவுசெய்து உங்கள் பெயர்- முழுவிலாசம், தொலைப்பேசி எண், கம்பியூட்டர் எண் ஆகியவைகளையும் குறிப்பிடுங்கள்.**



# கைக்குட்டை சுகமாக்குமா? - கைக்குட்டையில் அபிஷேகம் பரிசுத்தாவியின் வல்லமை உண்டாகுமா?



**டாக்டர். கே.முரளிதர்.**

ஒரு மெகா சுவிசேஷக் கூட்டத்தின் கடைசியில் அபிஷேகம் செய்யப்பட்ட **கைகுட்டைகள்** (கச்சைகள்) வினியோகம் செய்யப்படுவதும் அதில் ஒன்றை வாங்க வேண்டும் என்பதால் கைகலவரம் கூட உண்டாவதும் சாதாரண சம்பவங்களாக மாறிக்கொண்டிருக்கிறது. வாங்கிய கைக்குட்டைகளை வீட்டில் கொண்டு வந்து விசுவாசிகள் ஆறுதலாகவும், ஆசீர்வாதமாகவும் வாழ வாஞ்சிப்பதே இதில் முக்கிய காரணமாக எண்ணப்படுகிறது. இந்த கச்சை ஒரு வியாதியஸ்தனின்மேல் போட்டால் அந்த நபர் சுகம் அடைவார் என்றும் விசுவாசிக்கப்படுகிறது. இதற்குக் காரணமாயிருக்கிற வேதபாகம் அப்போஸ்தல நடபடிகள் 19ம் அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. பவுல் அப்போஸ்தலன் எபேசு பட்டணத்தில் ஊழியங்களுடைக்கிடையில் உறுமால்களும், கச்சைகளும் வியாதியஸ்தர்கள்,அசுத்த ஆவி பிடித்தவர்களின் மேல் போட்ட பொழுது அவர்கள் சுகமடைந்தார்கள். இங்கே சொல்லப்பட்டவைகளின் ஆவிக்குரிய காரியங்களைப் பற்றி நாம் அறிந்துக்கொள்ள வேண்டுமாயின் எபேசுவில் நடந்த சம்பவங்களை நாம் நன்றாக ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

பவுலின் ஊழியங்கள் எபேசு பட்டணத்தில் மிகப்பெரிய அளவில் நடந்ததாக ஊழியர்கள் பலரும் அபிப்பிராயப்படுகிறார்கள். எகிப்தில் அலெக்சாந்தரியாவும், சிரியாவில் அந்தியோக்கியா போல பண்டைய நாட்களில் எபேசு ஒரு புகழ் பெற்ற பட்டணமாகயிருந்தது. எபேசு ரோமா பட்டணத்தோடு நேரடி தொடர்புக்கொள்ளும்படிக்கு ரோடுகள் அமைத்துக்கொண்டார்கள். அதினால் பவுலின் ஊழியங்கள் வெகு சீக்கிரமாக பயன் உண்டாகும்படிக்கு வாய்ப்ளித்தது. அன்றைய ஏழு உலக அதிசயங்களில் ஒன்றான ஆர்த்தமிஸ்(டயானா) தேவியின் கோவிலும் எபேசுவில் பெயர் பெற்றதாகயிருந்தது.

எபேசுவில் யூதர்களின் ஜெப ஆலயத்தில் பவுல் தமது ஊழியத்தைத் தொடங்கி வசனத்தை கற்பித்துக்கொண்டிருந்தார். ஆனால் மூன்று மாதத்துக்கு பின்பு ஏறைக்குறைய எல்லா யூதர்களும் பவுலின் ஊழியத்தை விரும்பாமல் நிராகரித்துவிட்டார்கள். அவர்களின் இருதயம் கடினமாக்கப்பட்டு பவுலையும் ஊழியத்தையும் கேலி பண்ணி பரிகசித்தார்கள். இதினால் உள்ளம் நொந்துபோன பவுல் அவர்களைவிட்டு புற ஜாதிகளுக்கிடையில் கடந்துப்போனார். தீறன்னு பாடசாலையில் இரண்டுவருடம் வேதபாட வகுப்புகளை அவர் நடத்தினார். அந்த இடம் ஒரு புறஜாதியான பண்டிதருக்கு சொந்தமானதாகயிருந்தது. இந்த ஊழியம் அவ்வளவு சிறிய காரியமாக இருக்கவில்லை. சத்துருக்களால் சூழப்பட்ட நிலைமை சாத்தானின் சக்திகள் மேலோங்கிய நிலை, சகல ஜனங்களும் அதற்கு உட்பட்டு ஆடம்பரமாகவும்

ஆபாசமாகவும் வாழும் ஒரு பட்டணத்தின் தலைநகரத்தில் ஒரு புதிய மதம்(அபிப்பிராயம்) அறிவிக்கப்படுவதைப்பற்றி எண்ணிப்பாருங்கள். இரண்டு வருடமாக கடினமான சூழ்நிலையில் இரவு பகலாக ஜனங்களுக்கு போதனை செய்தும் ஊழியம் செய்வதைப்பற்றியும் சிந்தித்துப் பாருங்கள். பவுலடியாரின் கடினமாக வேலை நிமித்தம் அதிகதிமாக வியர்வை கொட்டியிருக்கும். சின்ன ஆசியாவில் எல்லா இடங்களிலும் வசனம் அறிவிக்கப்பட்டது. அதிக உற்சாகத்தோடும், எதிர்ப்பார்போடும் செய்துவந்த ஊழியத் திட்டங்கள்....?.

பவுல் அப்போஸ்தலன் சுவிசேஷமாக எங்கேயெல்லாம் சென்றாரோ, அங்கேயெல்லாம் மிகுந்த எதிர்ப்புகளைச் சந்திக்க நேர்ந்தது. விசுவாசம் மூலம்(அந்நிய தேவர்களைப்பற்றிய விசுவாசம்) லிஸ்திராவிலுள்ளவர்கள் சுவிசேஷத்தை பலமாக எதிர்த்தார்கள். தத்துவ ஞானம் என்னும் புத்திசாலியான விசுவாசத்தால் ஏதென்ஸ் நகரில் சுவிசேஷத்துக்கு விரோதங்கள் மேலோங்கி நின்றது. ஆனால் எபேசுவில் கிறிஸ்து விசுவாசம் மூலம் தங்களுக்குள்ள உலக பிரகாரமான சொத்துக்களும், புற ஜாதி மத விசுவாசமும் இழக்க நேரிடும் என்கிற பீதியும் அவர்களுக்கு தடையுண்டாக்கின.

ஆனால் வல்லமையுள்ள தேவன் பவுலின் கீழ்ப்படிதலையம் கடின வேலையையும் ஆதரித்தார். அதினால் ஏற்பட்ட பலன் அசாதாரணமான அற்புதங்களும், அடையாளங்களுமாக இருந்தது. சாதாரணமாக நடக்கும் அற்புதங்கள் மிக சாதாரணமானவைத்தான். எனினும் இந்த அசாதாரணமான அற்புதங்கள் ஏன்? மந்திரவாதிகளும், செய்வினைக்காரர்களும் நிறைந்திருக்கும் எபேசுவில் அற்புதங்களும், மாய ஜால வித்தைகளும் மிகச் மிகச் சாதாரணமாக இருந்தது. சாத்தான் தன்னுடைய அற்புத சக்திகளின்மூலம் தனது இராஜ்யத்தை ஸ்தாபிக்கிறான். இந்த காரியத்தில் சாத்தானை மிகச் சிறியவனாக எண்ணிவிடாதீர்கள். இப்படிப்பட்ட விஷயத்தை பல கிறிஸ்தவர்கள் அறிந்துக்கொள்ளுவதில்லை. அற்புத செயல்கள் எல்லாம் தேவன் மட்டுமே செய்கிறார் என்று யாரும் எண்ணவேண்டாம். அப்படி எண்ணிக்கொண்டால் கடைசியாக சாத்தானையும் அவனுடைய சீஷர்களையும் நாம் ஆதரிக்க வேண்டிய நிலைமையும் உருவாகும். இவ்வித செயல்கள் எல்லாம் நம்மிடையே வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. அற்புதம் செய்கிறவர்கள் ஆராதனைக்குரியவர்களாக போற்றப்படுகின்றனர். அதன் பலனாக நமக்கு பல உருவத்திலும் தன்மையிலும் அநேக தெய்வங்கள் உண்டாகிவிட்டன.

மோசே தனது கோலை பார்வோனின் அரண்மனையில் தரையில் போட்டபொழுது அது பாம்பாக மாறிற்று. பார்வோனின் மந்திரவாதிகளும் இதைத்தான் செய்தார்கள். அவர்களின் கோல்களும் பாம்பாக மாறிற்று. மோசேயும் ஒரு மந்திரவாதி என பார்வோன் நினைந்திருப்பான். ஒரு வினாடி காத்திருங்கள். மோசேயின் பாம்பு மற்றெல்லா பாம்புகளையும் விழுங்கிப் போட்டது. இது ஒரு அசாதாரணமான அற்புதச் செயலன்றோ?.

எபேசு பட்டணம் அவிசுவாசித்திலும் அந்தகாரத்திலும் பயத்திலும் பிசாசின் பிடியிலும் அடிமைப்பட்டுகிடப்பதை பவுல் அடியார் கண்டார். அவர் தன்னுடைய அயராத முயற்சியினாலும் ஆவிக்குரிய போராட்டத்துக்குள்ள ஆயுதங்களை உபயோகித்து அந்தக்கார சக்திகளுடைய கோட்டைகளைத் தகர்ந்தெறிந்தார். இந்த பட்டணத்திலிருக்கும் பொழுதுதான் கொரியந்தியருக்கு நிருபங்களை எழுதினார். **எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல் அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவ பலமுள்ளவைகளாயிருக்கிறது. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும் தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்கு**

**கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்.**(2 கொரி 10:45). இந்த காரியத்தை மறுபடியும் ரோமாபுரியிலிருந்து எபேசுவில் உள்ள சபைக்கு அப்போஸ்தலானகிய பவுல் எழுதினார்.. **துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும் இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்கு போராட்டம் உண்டு.**(எபேசி 6:12).

எனவேதான், எபேசியருக்கு ஒரு அற்புதச் செயலைக் காட்டுவதற்காக அல்ல. அதற்கு மேலாக ஒரு உன்னதமான(அசாதாரணமான) அற்புதத்தை செய்யும்படிக்கு பவுலடியார் தீர்மானித்தார். அவருடைய தேவனே மிகப்பெரிய தேவன் என்றும், ஜனங்கள் நம்பிக் கொண்டிருந்த தேவர்களும், தீர்க்கதரிசிகளும்,மந்திரவாதிகளும், செய்வினைக்காரர்களும், மந்திர வித்தைக்காரார்களும் சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு முன்பாக ஒன்றுமில்லை என்றும் பறை சாட்டவும் எண்ணினார். சீமோன் என்னும் பேர் கொண்ட மந்திரவாதி சமாரியாவில் அப்போஸ்தலனாகிய பிலிப்புவை எதிர்த்து நின்றபோது இதேபோல ஒரு சம்பவம் அங்கும் நடந்தேறியது.(அப் 8:9-13).

பவுலடியாரின் மூலம் தேவன் வெளிப்படுத்தின அற்புதம் எப்படிப்பட்டதாக இருந்தது?. அப்போஸ்தலரின் உறுமாலும்,கச்சையும், வியாதியஸ்தர்களின் மேல்போட்டவுடன் அவர்கள் சௌக்கியமடைந்தார்கள். பொல்லாத ஆவிகளும், அசுத்த ஆவிகளும் அவர்களைவிட்டு அகன்றது. இங்கே கச்சைகளின் முக்கியத்துவம் என்பது என்ன? அது வெறும் துணித்துண்டுகள். கடினமாக உழைத்த பவுலடியார். வியர்த்து ஒழுகினபொழுது துடைப்பதற்கு உபயோகித்த துண்டு துணிகள், கச்சைகள்(கைக்குட்டைகள்) இங்கே நாம் கவனிக்கவேண்டியது. கச்சைக்கல்ல முக்கியத்துவம், அதாவது பவுலின் முகத்திலும்,கழுத்திலும்,நெஞ்சிலும்,ஒழுகி ஓடின வேர்வைக்காகும். நாம் முக்கியத்துவம் கொடுக்கவேண்டியது பல காரியங்களும் நமக்குப் புலப்படாததால்,நாம் சரியான சத்தியத்தை புரிந்துக்கொள்ள முடியாமற்போகிறோம். முக்கியமானதை மறந்துவிட்டு, முக்கியமில்லாதவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து விடுகிறோம். சிருஷ்டிகரை மறந்து சிருஷ்களில் மகிழ்ச்சியடைகிறோம்? புகழ்ந்துப் பாடுகிறோம்.

பவுலின் சரீரத்தில் ஒழுகிய வேர்வையை துடைத்து ஒரு துணிக்கச்சை, அசுத்த ஆவிகளை அகற்றும் ஆயுதமாக மாறுகிறது. இடைவிடாமல் இரண்டு வருடமாக, முறுமுறுக்காமல் சுவிசேஷம் அறிவித்த பவுலுக்கு எவ்வளவோ வேர்வை கொட்டியிருக்கவேண்டும். அவைகளுக்கு எதிர்த்து பட்டணத்திலே மந்திரவாதிகள், எதிராளிகள், யூதர்களின் கீழ்ப்படியாமை, பணம் உண்டாக்குகிற தெமேத்திரியு, அவனுடைய சீஷர்கள், எல்லாவற்றிற்கும்மேலாக வானத்திலிருந்து விழுந்த குட்டி தெய்வம், இப்படி எல்லாவற்றிற்கும் எதிராக நிரந்தரப் போராட்டம் செய்த பவுல்,பிசாசு தாண்டவமாடும் அந்த எபேசு பட்டணத்தில், தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்தும் படிக்கு, அதிகமாக வேர்வை கொட்டவேண்டியதாயிற்று. அப்பொழுதுதான் சர்வ வல்லமையுள்ளவர் தேவன் இப்படிப்பட்ட ஒரு அபூர்வமான அற்புதம் நடத்தினார். தேவ நாமத்தினால் அற்புதங்களும், அடையாளங்களும், செய்கிறவர்களே,சற்று நிதானியுங்கள். நீங்கள் ஜெபித்து ஒரு சிறு கச்சையை உங்களிடமிருந்து வாங்குகிறவர்கள். எதையும் எளிதாக விசுவாசிக்கவும், விலை கொடுத்து வாங்குவதற்கும் ஆசைப்படுகிறார்கள். அவர்களை சுலபமாக ஏமாற்றும் எண்ணத்தோடு, ஒருபோதும் செய்யாதீர்கள். நீங்கள் செய்கிற ஒன்றும் பரிசுத்த ஆவியானவரால் முத்திரை போடப்படாமலிருந்தால் உங்களை விசுவாசிக்கிறவர்களை பற்றிய தாகமும்,வேர்வையும் அதில் இல்லாமற்போனால்... நீங்கள் செய்வதெல்லாம் வசனத்துக்கு விரோதமும், பயனற்றவையுமாகும் என்பதை மறந்துவிடாதீர்கள்.

நினைவுகூறுங்கள். குளிர்காற்று வீசும் தோட்டத்தில் தமக்குப் பிரியமான சீடர்களுக்கு ஒருமணி நேரம் கூட விழித்திருக்கக்கூடாமல் இருந்தபொழுது, நம்முடைய அருமைநாதர், இரட்சகர் எவ்வளவாக வேர்வையால் நனைந்தார். இரத்ததுளிகள் போல வேர்வை விழுந்ததே? இரத்தம் கலந்து வந்த இந்த வேர்வை துளிகள் ஒரு அசாதாரணமான அற்புதமாக, அடையாளமாக மாறவில்லையா? அவை எவரின் மேல் விழுந்தாலும் அந்த ஆத்துமா சாத்தானிலிருந்து மீட்கப்பட்டு நித்திய ஜீவனுக்கு ஏதுவாக மாற்றப்படுவார்கள் அல்லவா.. இது எவ்வளவு பெரிய அற்புதம்.

உலகம் முழுவதையும் மீட்டுக்கொள்ளும் மேன்மை நிறைந்த அற்புதம் இயேசுகிறிஸ்துவின் வேர்வை சிந்திய இந்த அற்புதத்துக்கு முன்பாக, எந்த அற்புதம் மிகப்பெரியதாகத் தோன்றக்கூடும்? கல்லறையிலிருந்து லாசருவை உயிர்த்தெழப் பண்ணினது உட்ப்பட எல்லா அற்புதங்களும், இந்த இரத்தம் கலந்த வேர்வையின் அற்புதங்களே.

தீயானாள்தேவியின் கோட்டை எனப்பட்ட எபேசுவில் எதிர்பாராதவிதமாக ஒரு எழுப்புதல் உண்டாயிற்று என அப்போஸ்தல நடபடிகள் 19ம் அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. தேவ வசனம் வல்லமையோடும், ஆசீர்வாதத்தோடும் பரவிற்று.

அருமையான சகோதர, சகோதரிகளே, இதுபோல ஒரு எழுப்புதல் உங்கள் கிராமத்திலோ, பட்டணத்திலோ உண்டாக வேண்டும் என வாஞ்சிக்கிறீர்களா?

அப்படியானால் வேர்வை துளிகள் சிந்தும்வரை செயல்படுங்கள். மற்றெல்லா வழக்கங்களும் பயனற்றவையாக மாறும்பொழுது வேர்வையை உண்டாக்கும் வழியை பரிசோதித்துப் பாருங்கள்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## தேர்தலுக்காக விசேஷ ஜெபம்:

**CSIயில் நான்கு டையோசிஸ்களிலும் புதிய பிஷப் எலக்ஷன் நடக்கப்போகிறது.**

**அப்படியே தமிழ்நாடு, கேரளத்தில் சட்டசபைக்கான தேர்தல் நடக்கப்போகிறது.**

**பிஷப் எலக்ஷனும் - சட்டசபை எலக்ஷனும்** அரசியல்வாதிகளின் எலக்ஷனாக கருதப்படுவதால் நம் ஜெபம் மிக முக்கியம்.

ஒவ்வொரு பிஷப் பின்னாலும் பல அரசியல்வாதிகள் உண்டு. மாடரேட்டர் அவர்கள் தான் இன்னும் ஓய்வுபெறவில்லை என்று பிடிவாதம் பிடிக்கிறார். அவரே மாடரேட்டராக பதவி வகிக்க அமென்மெண்ட்டுக்கு நீதிமன்றத்தில் 1 மணி நேரம் வாதாட வக்கீலுக்கு 40 லட்சம் கொடுத்து பலமுறை சுப்ரீம் கோர்ட் வழக்கு இவர்கள் நடத்தியபடியால் பல கோடிகள் இதுவரை செலவழித்து இருக்கிறார்கள். அந்த பணத்தை திரும்ப எடுக்க தேர்ந்தெடுக்க இந்த நான்கு பிஷப்மார்களின் எலக்ஷனுக்கு டெப்டி மாடரேட்டர் அவர்கள், மாடரேட்டர் பதவி ஏற்கவும் எத்தனை கோடிகள் பேரம் பேசப்படுகிறதோ தெரியவில்லை?.

புதிய பிஷப்மார்கள் விற்பனைக்கு வந்த சரக்காக மாறப்போகிறார்கள். அப்படி பல கோடிகள் கொடுத்து பிஷப் பதவியை மாடரேட்டரிடமிருந்து அந்த பதவி பெற்றால் அவரவர் டையோசிஸ்களிலிருந்து பிஷப்பாக பதவி ஏற்றவர்கள் சபை மக்கள் இட்ட காணிக்கைகளிலிருந்துதானே இவர்கள் அந்த பணத்தை எடுத்தாகவேண்டும்?

CSIயின் நிலையை பார்த்தீர்களா? நாம் கண்டிப்பாக தினசரி இவர்களுக்காக ஜெபிக்கவேண்டும்.




Selected

**வளர்ந்துக்கொண்டே** செல்லும் இன்றைய சமுதாயத்தில் **குறைந்துக்கொண்டே** செல்லும் உடைகளால் கிறிஸ்தவ சமுதாயம் கேள்விக்குறிகளோடு நின்றுக்கொண்டிருக்கிறது. அதற்கான விடை. **"ஆள் பாதி ஆடை பாதி"** என்ற பழங்கால வழக்கு மொழி மனிதனை பாதிக்குப் பாதியாகக் காட்டிக்கொடுத்தபோதிலும், பாதியான ஆடையிலும் மேலும் பாதி ஆடையை எடுத்துவிட்டு **அரை நிர்வாணத்தையும்** அங்கீகரித்துக்கொள்வது வேதனையானது.

**நவநாகரீகம்**(Style) என்ற போர்வையில் வாழ விரும்பி, நிர்வாணிகளாகுமளவிற்கு உடையினை உதறி வருகிறார்கள். இவைகளில் சிக்கிக்கொண்டோர், ஒழுக்கத்தைக்குறித்து பேசும்போது ஒத்துக்கொள்ளாமல் வாக்குவாதம் செய்வதையே வழக்கமாக்கிவிட்டனர். விவாதத்தினால் மனமாற்றத்தை பின்னுக்குத் தள்ளிவிடுகின்றனர். **"என் இஷ்டம்"** என்று கூறும் இவர்கள் வார்த்தை மற்றோர்க்கு கஷ்டத்தை உண்டாக்குமென்றால், அது நஷ்டக்கணக்கில் சேர்க்கப்பட வேண்டியது. **"தன்னைக் காக்க"** என்ற நிலை மாறி, **"தன்னைப் பார்க்க"** என்ற இவர்களின் நிலைக்கு தவறி நிற்போர்களை சத்துரு குறி வைத்துத் தாக்குவது மிக எளிதானது. அப்படியே **"தன்னைப் பார்க்க"** என்ற இவர்களின் நிலை மாறி **"தன்னைப் படைத்தவர் பார்க்க"** என்ற நிலைக்கு மனம் மாற்றப்பட்டு இப்படி தேறி நிற்போர்களை சத்துரு குறிவைத்துத் தாக்குவது கடினமானது. **"புசிக்கவேண்டாம்"** என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியை புசித்தாயோ?"ஆதி 3:11 என்று **ஆதாமிடம்** ஆண்டவர் கேட்டதுபோல, விலக்கி வைக்கப்பட்டிருக்கும் வலைகளில் விழுந்துவிட்டதினால் வந்த விளைவே இவையாகும். மெல்ல மெல்ல சத்துரு உள்ளே உள்ளத்தில் நுழைக்கும் நூல்களை அடையாளம் கண்டுக்கொள்ள முடியாவிடில், அது போர்வையாக நெய்யப்பட்டு உடலையல்ல நம் **வாழ்க்கையையே** முழுவதும் மூடிவிடும். விலகியிருக்க வேண்டிய **ஆபாசங்களுக்கும்,கலைஞர்களுக்கும், சினிமாவுக்கும், தொலைக்காட்சி** நிகழ்ச்சிகளுக்கும் இடங்கொடுத்து சாட்சியாயிருக்க வேண்டிய உங்களை காட்சிப் பொருளாகமாற்றி தன் அவன் ஆட்சிக்குள் வைத்துக்கொள்வதுதான் **பிசாசின்** வேலை.

**நிர்வாணத்தைக்**கண்டு அதை மற்றவர்களுக்கு அறிவித்த **கானானுக்குக்** கிடைத்த சாபம் அத்தனை பெரிதாயிருக்கமென்றால்(ஆதி 9:22), **நிர்வாணமாயிருந்த தகப்பனுடைய பாவமும்** பெரியதுதானே? விலகியிருக்கும் உங்கள் உடைகளால் வழியிலிருப்போரை சாபத்தைச் சம்பாதிக்க வைத்துவிடாதீர்கள். சேமும்,யாப்பேத்தும் **நிர்வாணத்தைக்** காணக்கூடாது என்று பின்னிட்டு வந்ததுபோல(ஆதி 9:23). உங்களைக் காணும் மக்கள் உங்களைக் கடக்கும்போது கண்கள் கூசி பின்னிட்டு நடக்க செய்துவிடாதிருங்கள். அது உங்களைப்பற்றி மக்கள் வேறுவிதமாக யோசிக்க வைத்துவிடும்.

தேவனாகிய கர்த்தர் ஆதாமைக்கூப்பிட்டு நீ எங்கே இருக்கிறாய்? என்று கேட்டபோது **"நான் நிர்வாணியாயிருக்கிறேன்"**(ஆதி 3:9,10) என்று உத்தரவு சொன்னதுபோலவே, ஆடைகளைப் பற்றிய விஷயத்தில் மெத்தனத்தோடு வாழக்கூடாது. **எப்படியும் அணியலாம், எதையும் அணியலாம்** என்ற தாறுமாறான தவறான வழிக்குள் உங்களை திசை திருப்பிவிடும். இன்றைய நாட்களில் கடைகளில் விற்கப்படும் பல ஆடைகள் (விசேஷமாக பெண்களின் ஆடைகள்) நடிகைகளின் பெயர்களைக்கொண்டே அழைத்து விற்கப்படுகிறது. உடைகள் அழகைக் கூட்டலாம், ஆனால் **கவர்ச்சி** என்ற கட்டமோ களைந்தெறியப்படவேண்டியது ஆகும். அழகைக் குறித்த எண்ணம் எல்லை தாண்டுமென்றால், அது கவர்ச்சியில்தான் போய் கவிழும் என்பது நிச்சயம்.



குழந்தைப் பருவத்திலே தங்கள் பிள்ளைகளுக்கு இப்படிப்பட்ட ஆடைகளை அணித்து கண்குளிரும் பெற்றோர்களும் உண்டு. **பெற்றோரது ஆவிக்குரிய நிலையே** குழந்தைகளின் ஆபாச ஆடைகள் மூலம் பிரதிபலிக்கிறது என்பதே அதற்கு காரணம். இத்தகைய நோக்கோடு வியாபார யுக்தியுடன் விதவிதமான ஆடைகளை சந்தையில் அறிமுகப்படுத்தி தரமாக வாழவேண்டிய நம்மை தேவனே தகுதி நீக்கம் செய்யும் அளவிற்கு சத்துரு மாற்றிவிடாதபடிக்கு எச்சரிக்கையாயிருப்போம்.

**குறைந்துக்கொண்டே வரும்** ஆடை அளவினால் **பரிசுத்தமும் குலைந்துக்கொண்டே** வருகின்றது என்பதும் ஆராய்ந்து அறிந்துக்கொள்ளவேண்டியது அவசியம்.

ஆரோன் எனக்கு **ஆசாரிய ஊழியம்** செய்யத்தக்கதாக அவனைப் **பரிசுத்தப்படுத்தும் படி** அவனுக்கு **வஸ்திரங்களை** உண்டாக்கும் பொருட்டு, **நான் ஞானத்தின் ஆவியால் நிரப்பின விவேகமான இருதயமுள்ள யாவரோடும் நீ சொல்லுவாயாக**(யாத் 28:3) என்றார் கர்த்தர். இந்நாட்களில் இத்தகைய டெய்லர்களை அடையாளம் கண்டுக்கொள்வது அரிதானாலும், உடைகளைத் தெரிந்தெடுக்கும் நாமாவது ஞானத்தின்ஆவியால் நிரம்பின விவேகமுள்ள இருதயமுள்ளவர்களாக செயல்பட்டால் நம் பிள்ளைகளின் மனதையும் நம் மானத்தையும் காத்துக்கொள்ளலாம். அப்படி தகுதியான ஆடைகளை தரித்துக் கொண்டவர்களானால், நிர்வாணிகளாய்க் காணப்படமாட்டோம்(2 கொரி 5:3). **"ஜனங்களை தங்கள் பகைவருக்குள் அவமானப்படத்தக்கதாக ஆரோன் அவர்களை நிர்வாணி யாக்கியிருந்தான்**(யாத் 32:25) என்று இஸ்ரவேல் ஜனங்களைக்குறித்து சொல்லப்பட்டிருப்பதைப் போல நம்மைக்குறித்தும் அப்படிப்பட்ட குறிப்பு எழுதப்பட்டுவிடக்கூடாது. இப்படிப்பட்ட நிலைக்கு வடிவமைப்பாளர்கள்(டிசைனர்ஸ் மற்றும் டெய்லர்ஸ்) உங்களை வழுக்கி விழச்செய்துவிடாத படிக்கு எச்சரிக்கையோடிருங்கள். அவமானத்திற்கு விலகி வாழுங்கள்.

நம்மை நிர்வாணிகளாக்குவதும், நமது கண்களை **நிர்வாணத்தை நோக்கியே** திருப்புவதுமே சத்துருவின் நோக்கம் என்பதை உணர்ந்தவர்களாக, அவனது போக்கிற்கு எதிர்த்து நிற்போம்.

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் **சிறியரில் ஒருவனுக்கு இடறல்** உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய **கழுத்தில் எந்திரக்கல்லைக்கட்டி சமுத்திரத்தின்** ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும்"(மத் 18:6)என்ற வசனத்தின்படி பிறர் நம் உடையால் இடறும் கல்லாக வழியில் நில்லாதபடி காத்துக்கொள்ளுங்கள். கன்மலையாகிய கிறிஸ்துவில் திடமாகவும்,தரமாகவும் நீங்கள் வாழும்போது, ஓடிவந்து உங்கள் மீது மோதி நொறுங்கிப்போகும் மனிதர்களைக்குறித்து கவலைக்கொள்ளவேண்டாம். இடறியவர்கள் நீங்கள் அல்ல அவர்களே என்பதை உங்கள் வாழ்க்கையே, உலகிற்கும், உன்னதத்திற்கும் வெளிப்படுத்தும். உடைகள் விஷயத்தில் நாம் ஜாக்கிறதை உள்ளவர்களாக இருக்க, தேவனுக்கு ஏற்ற விதத்தில் நடந்துக்கொள்ள ஞானம் கொடுக்கும்படி ஜெபியுங்கள்.

# தகுதியான உடைகள்:



**(ஸ்தீரிகள்) தகுதியான வஸ்திரத்தினால்..... தேவ பக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்தீரிகளுக்கு ஏற்றபடியே தங்களை அலங்கரிக்க வேண்டும்.** 1 தீமோ 2:10.

## தகுதியான உடையின் அளவு என்ன?

தன் **மானம்** (Naked) காணப்படத்தக்கதாக **நிர்வாணமாய்**(Naked) நடவாதபடிக்கு விழித்துக்கொண்டு

தன் **வஸ்திரங்களைக்** காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்.வெளி 16:15.

## ஆபாச உடைகளின் மாதிரி:

## (WOMENS LEGGINGS):



உங்கள் வீட்டில், சபையில் உங்கள் பிள்ளைகள், **அக்கா,அம்மா, மருமகள்,பேத்தி** இப்படி யாராவது மேலே காணும் படங்களில் உள்ளபடி லெகின்ஸ் உடைகளை அணிகிறார்களா?. ஜாக்கிறதை.

உங்கள் பிள்ளைகளுக்கு கர்த்தருக்கு பிடித்த தகுதியான உடைகள் போட சொல்லுங்கள்.

இதுதான் **ஆபாச உடைகளாகும்.** மற்றவர்கள் தங்களை காணவேண்டும். தங்கள் **கவர்ச்சி நிர்வாண** பகுதியை காணவேண்டும் என்பதற்காகவே இப்படிப்பட்ட உடைகளை சில பெண்கள் உடுத்துகிறார்கள். ரெடிமேட் கடையில் சென்று துணி தேர்ந்தெடுக்கும்போது ஜீன்ஸ் பேன்ட்-மேலே டி-சார்ட் வேண்டும். ஆனால் அந்த டி-சார்ட் **நீளமாக இருக்கக்கூடாது** குனிந்தால் **இடுப்பும்,அதற்கு கீழே** மலம் கழிக்கும் இடத்தின் ஆரம்ப பகுதி தூரம்வரை தெரியவேண்டும்.

இப்படித்தான் அளவுகூறி ரெடிமேட் துணி எடுக்கிறார்கள். அப்படியானால் அதன் அர்த்தம் என்ன? குனியும்போது மறைக்கப்படவேண்டிய **பாகங்களின் கவர்ச்சி பாகத்தை** மற்றவர் காணவேண்டும் என்கிற மாதிரியான **வக்கிரபுத்தி இது?**

**லெக்கின்ஸ்** போட்டு வரும் வளர்ந்த பெரிய பெண்கள்கூட லெக்கின்ஸ்க்குமேல் உள்ள சுடிதாரை **பக்கவாட்டில்** நீளமாக **இடுப்புவரை கிழித்துக்கொண்டு** லெக்கின்ஸ்க்குள் இவர்கள் அணிந்திருந்திருக்கும் **ஜட்டி-டி-ரேசிங்** பேப்பரில் காணுவதுபோல காணப்பட வேண்டும் என்பது இவர்களின் விருப்பம். இவர்கள் விரும்புகிறபடி கடைக்காரரும் இடுப்புவரை கிழித்து தைத்து ரெடியாக வைத்து இருக்கிறார்கள். **ஆபாசத்தை** பார்க்க விரும்பாத கண்களையும் **இவர்கள் பார்க்க வைக்கிறார்கள்.** இப்படிப்பட்டவர்களுக்கு கொஞ்சம்கூட **கூச்ச சுபாவமோ, வெட்கம், மானமோ** கிடையாது.

இதற்கு இவர்கள் கூறும் பதில் என்ன தெரியுமா? எங்களுக்கு இது Comfortable ஆக இருக்கிறது. மேலும் பார்க்கிறவர்கள் **கண்கள் சரியில்லை** என்று நியாயப்படுத்துகிறார்கள்.

# இந்திய அறநிலை துறை - இந்து கோயில்களில் - ஜீன்ஸ்,லெக்கின்ஸ்க்கு தடை:

**பெண்கள் ஜீன்ஸ் என்ற இருக்கமான பேண்ட்கள், லெக்கின்ஸ்** போன்ற தோலோடு பதிந்த உடைகள்,அரைகால் சட்டை அணிந்த பெண்கள் கோயில்களுக்குள் பிரவேசிக்கக்கூடாது என்று விக்கிரகத்தை வணங்கும் **இந்துமத அரசாங்கமே சட்டமாக** இயற்றி கட்டளை பிறப்பிக்கப்பட்டிருப்பதை நாம் அறிவோம்.



ஆனால் **பரிசுத்த கண்ணராகிய நம் பரிசுத்த தெய்வத்தை ஆராதிக்கும் கிறிஸ்தவ பிஷப்மார்களோ, ஆயர்களோ, பாஸ்டர்மார்களோ** சபைக்கு வரும் இப்படிப்பட்ட பெண் பிள்ளைகளையோ அவர்களின் பெற்றோரையோ கண்டிப்பதில்லையே ஏன்?.

இரட்சிக்கப்பட்டேன் என்று கூறும் விசுவாசிகள்கூட தன் பிள்ளைகளை உடை விஷயத்தில் கண்டிப்பதில்லை.

சிறுமியாக இருக்கும்போதே பிள்ளை விரும்புகிற இப்படிப்பட்ட ஆபாச உடைகளை வாங்கி கொடுக்காமல் இதன் காரணத்தை விளக்கியிருந்தால் இப்போது வளர்ந்தபின் அவர்களை நீங்கள் உடை விஷயத்தில் கண்டிக்கமுடியாது போகுமே!. நாளை நீங்கள் கர்த்தருக்கு கணக்கு கொடுக்க வேண்டி வரும்போது **கர்த்தர் உங்களை அறியேன். நீங்கள் என்னுடையவர்கள் அல்ல** என்று கூறிவிட்டால் என்ன செய்வீர்கள். ஜாக்கிறதை!.

இப்படிப்பட்ட **ஆபாச லெக்கின்ஸ் உடைகளை உடுத்தி செல்லும் எவரும் கர்த்தரின் பிள்ளைகளாக இருக்கமாட்டார்கள்.**

இப்படிப்பட்டவர்கள் உள்ளம் **எல்லாம் காமம்** நிறைந்ததாகவே இருக்கும். இப்படிப்பட்ட பெண்கள் வீதியில் போவோர் எல்லாரும் தங்களின் **மறைவான,மூடியிருக்கவேண்டிய சரீர பாகங்களை காணவேண்டும்** என்று விரும்புகிறவர்களாகத்தான் இருப்பார்கள்.

‘ அதுபோலவே இப்போது **Sleevless ஜாக்கெட்** கையில்லா ஜாக்கெட் அணிபவர்களும் அடிக்கடி கைகளை உயர்த்தியவாரே, **தலைமுடியை சரிசெய்வதுபோல்** பாவலா காண்பிப்பது, தன் கையின் **அக்கிள் பகுதியை** மற்றவர்கள் காணவேண்டும் என்பதற்காகவே அப்படிப்பட்ட சேட்டைகள் செய்கிறார்கள்.



‘ இது எத்தனை **அருவருப்பு. நாற்றம் எடுக்கும் சரீரத்தின்** ஆபாச பகுதிகளில் ஒன்றாக குறிக்கப்படும் **அக்குள்** பகுதியை மற்றவர்கள் பார்ப்பதில் இவர்களுக்கு மனதிற்குள் ஏற்படும் ஒருவிதமான **காம சுகம்** என்று மனநல மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளுக்கு இது தேவையா? வயது முதிர்ந்த பெண்கள்கூட இப்படி அணிவது தன் பிள்ளைகளையே கெடுக்கிறதே!

பெரும்பாலான சினிமா நடிகைகள் தங்கள் கைகளை உயர்த்தி அக்கிள் பாகத்தை காண்பிப்பதுதான் கவர்ச்சி. அதையே கிறிஸ்தவர்களும் பின்பற்றுவது **தேவனின் ஆசீர்வாதத்தை இழக்க துணிகிறார்கள்** என்று அர்த்தமாகிறது.

விக்கிரக தெய்வங்களை வணங்கும் **புறஜாதி மக்களே** அதுபோன்ற உடைகளை உடுத்திகொண்டு அவர்களுடைய கோயில்களுக்கு வரக்கூடாது என்று சட்டம் இயற்றியுள்ளனர்.

ஆனால் **பரிசுத்த தெய்வத்தை வணங்கும்** நாம் அதற்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும் அல்லவா?.

சபை விசுவாசிகள் அறிவது மற்றவர்கள் கீழ்படிகிறார்களோ இல்லையோ **ஜாமக்காரன்** வாசகர்களாகிய உங்கள் குடும்பத்தில், இதை எழுதும் என் குடும்பத்தில் நம் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், நம் குடும்பத்தில் உள்ளவர்கள் யாரும் இதுபோன்ற உடைகளை உடுத்தாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்.

இப்படிப்பட்ட **உடைகள் தேவ பார்வையில் அருவருப்பாகும்.**

இப்படி உடுத்துவது **பெண்களின் சுதந்திரத்தில் தலையிடுவது** ஆகாது.

**சுதந்திரத்துக்கும் ஒரு எல்லை உண்டு.**


கட்டுப்பாடும் உண்டு. அதை புரிந்துக்கொள்ளவேண்டும். ஜாக்கிறதை!.

‘ **ஸ்திரீகளும் மயிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது, விலையேறப்பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல்,**

‘ **தகுதியான வஸ்திரத்தினாலும்,நாணத்தினாலும்,தெளிந்த புத்தியினாலும், தேவ பக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியை களினாலும்,தங்களை அலங்கரிக்கவேண்டும்.**

‘ **ஸ்திரீயானவள் எல்லாற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து, அமைதலோடு கற்றுக்கொள்ளகடவள். 1 தீமோ 2: 9 -11.**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖




# New International Version (NIV) என்னும் ஆங்கில வேதப்பதிப்பின் மூலம் நடக்கும் இரகசிய வேத புரட்டு

SELECTED

கல்லாதவர்களும்,உறுதியில்லாதவர்களும் மற்ற வேத வாக்கியங்களைப் புரட்டுகிறதுபோலத் தங்களுக்குக் கேடுவரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள். 2 பேதுரு 3:16.

வெளி 22:19 - ஒருவன் இந்த தீர்க்கதரிசன புத்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவபுத்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும் இந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார்.

இன்றைய தலைமுறையினருக்கு ஆங்கிலம் கல்வி,வேலைவாய்ப்பு மற்றும் கம்பியூட்டர் போன்ற தொடர்புகளுக்கு ஒரு முக்கிய தொடர்பு மொழியாக காணப்படுகிறது. ஆங்கிலம் தெரியாமல் தமிழ்நாட்டை விட்டு வேறு மாநிலங்களுக்கோ, நாடுகளுக்கோ தொடர்பு கொள்ளமுடியாது. எங்கு பார்த்தாலும் ஆங்கில மோகம் இளைஞர்களிடையே தலை விரித்தாடுகிறது. ஆங்கிலம் தெரியாமல் இந்நாட்களில் வாழ்க்கையில் வெற்றி பெறுவது கடினம். இந்த ஆங்கில மொழியிலே எளிமையாக வாசிக்கக்கூடிய வேதாகமம் என்று சொல்லக்கூடிய NIV(New International Version) என்ற ஆங்கில வேத மொழிபெயர்ப்பு கிறிஸ்தவ இளைஞர்கள் கையில் ஏந்திக்கொண்டு சபைக்கு வருகிறதையும் படிப்பதையும் தமிழகமெங்கும் பரவலாகக் காண்கிறோம்.

குறிப்பாக ஆங்கில ஆராதனை நடத்தும் திருச்சபைகள், வேதவினா நடத்தும் பிரபல ஊழிய ஸ்தாபனங்கள் மற்றும் வேத பாடங்கள் நடத்தும் வேதாகமக் கல்லூரிகள் NIV(New International Version) மொழிபெயர்ப்பை அடிப்படையாகக் கொண்டு நடத்துகின்றன.

இது இக்கடைசி நாட்களில் சாத்தானின் மிகப்பெரிய தந்திரம் ஆகும். கிறிஸ்தவ விசுவாசத்தை தகர்க்க சாத்தான் கீழ்க்குறிப்பிடும் வழிகளை கையாண்டு வருகிறான்.

## துர் உபதேச போதனைகளை பிரபலப்படுத்துவது:

**யெகோவா சாட்சிகள்**(Jehovah Witness), **மர்மோன்கள்**(Mormons) போன்ற பிசாசின் சபைகள் மூலமாக புதிய வேதாகமம் திருப்புதல் என்று கூறி அதில் வேத வசனங்களை **குறைப்பது, திருத்துவது** ஆகிய இப்படிப்பட்ட செயல்கள் மூலமாகவும் ஆவியானவர் எழுதிய வேத வசனத்தின் **உண்மை அர்த்தத்தை மாற்றுவது** ஆகிய ஏற்பாடுகளை செய்துள்ளான். இப்படிப்பட்ட மறைமுக வஞ்சக வேலைகளில் பிசாசு இறங்கிவிட்டான்.

NIV(New International Version)நாற்பது இடங்களில் Hell என்ற வார்த்தையை அந்த NIV ஆங்கில வேத புத்தகத்தில் நீக்கியுள்ளது.

இப்படியாக அநேகரை கிறிஸ்தவ விசுவாச வாழ்க்கையை விட்டு விலக்கவும், நரகத்திற்கு கொண்டு செல்லவும் பாவத்தில் விழத்தள்ளவும் கிறிஸ்தவத்தினூடாக பிசாசு செயல்பட்டு வருகிறான். இதில் அநேக ஊழியர்கள் சாத்தானுடைய தந்திரத்தை அறியாமல் இயேசுகிறிஸ்துவை **தெய்வம் அல்ல** என்று மறைமுகமாக பிரதிபலிக்கிற NIV பைபிளை கையில் வைத்து போதிக்கிறார்கள். பிரசங்கிக்கிறார்கள் NIV பைபிள் உபயோகிக்கிறவர்களின் வாழ்க்கையில் கிறிஸ்து போதித்த பரிசுத்த வாழ்க்கை மற்றும் அநேக வேத சத்தியங்கள்படி வாழும் வாழ்க்கை இவைகளை அவர்களிடம் காண முடியவில்லை. ஏனெனில் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தின் **மூலமாக இரட்சிப்பு** என்ற கோட்பாட்டையே **NIV என்ற** அந்த ஆங்கில மொழிபெயர்ப்பு வேதம் மூடி மறைக்கிறது.

1). **இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தை** என்று பவுலடியார் கொலோசெயருக்கு எழுதின நிருபத்தில் Colossians 1:14 குறிப்பிட்டதை அந்த வசனம் NIV வேதத்தில் விடுப்பட்டதை கோடிட்டு காட்டுகிறேன்.

The Niv omits CHRIST'S BLOOD in Colossians 1:14

| NIV Collossians 1:14<br>பிழையான மொழி பெயர்ப்பு | KJV<br>சரியான மொழி பெயர்ப்பு |
|---|---|
| In whom we have Redemption<br>இயேசுகிறிஸ்துவின் இரத்தம் மூலமாக என்ற வார்த்தையை நீக்கிவிட்டு The forgive ness of sins என்று முடித்துள்ளனர். | In whom we have redemption<br><br>**Through his blood** |
| The forgiveness of sins | Even the forgiveness of sins |

we all know that salvation is by the shed blood of Christ.
"Without the shedding of blood is no remission" Hebrews 9:22.

Maybe the devil wants "the blood" out of the Bible, because believers overcome the devil by " the blood of the Lamb" Revalation 12:11.

2). பிலிப்பு எத்தியோப்பிய மந்திரிக்கு ஞானஸ்நானம் கொடுத்தபோது அப் 8:37ல் காணப்படுகிற மந்திரி கூறிய **"இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன்"** என்ற முக்கிய வார்த்தைகள் NIVயில் விடுப்பட்டுள்ளது.

| NIV Act 8:37 | KJV சரியான மொழிபெயர்ப்பு |
|---|---|
| **இயேசுகிறிஸ்துவை** தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கிறேன் என்ற முக்கிய வசனமே NIV வேதத்தில் இல்லை. | And Philip said,If thou Believest with all thine heart, thou mayest, And he answered and said, I believe that **Jesus Christ is the Son of God** |

The NIV omits Acts 8:37.because the Eunuch having just been saved, and wishing to be baptized states the condition for correct Bible baptism to take place as being.
"I believe that Jesus Christ is the Son of God".

3). NIV ல் வேதத்தில் **ஆறு இடங்களில்** இயேசுகிறிஸ்து தெய்வம் இல்லை. இயேசுகிறிஸ்துவை தெய்வமாக வணங்கவேண்டிய தேவை இல்லையென்று **வசனங்களை** திரித்து மாற்று வார்த்தையுடன் வெளியிட்டிருக்கிறார்கள்.

| The NIV denies Christ WORSHIP in 6 out of 12 passages.<br>NIV (4352) | KJV(4352) |
|---|---|
| a man with leprosy came and **knelt** matt 8:2<br>குஷ்டரோகி இயேசுவிடம் வந்து **முட்டியிட்டான்** என்று மட்டும் எழுதியுள்ளது.ஆனால் **ஆராதித்தான்** என்ற வார்த்தை இல்லை- தமிழில் பணிந்து என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. | there came a leper and **worshipped** him |
| a ruler came and knelt before him. Mat 9:18 | There came a certain ruler **worshipped** and him |
| Woman came and **knelt** before him. Mat 15:25 | Then came she and **worshipped** him |

இயேசுகிறிஸ்துவை தெய்வமாக யூதர்கள் அங்கீகரிக்கவில்லை.ஆகவே யூதர்களுக்கு சாதகமாக இப்படிப்பட்ட முக்கியமான வார்த்தைகளை நீக்கி இயேசுவின் **தெய்வ மகிமையை** நீக்க யூதர்களோடு **எகோவா சாட்சியினரும்** முயலுகிறார்கள்.

எங்கெல்லாம் இயேசுகிறிஸ்து தெய்வமாக ஆராதிக்கப்படுகிறார் என்று மூலபாஷையில் எழுதப்பட்டதோ அவைகளை இவர்கள் நீக்கிவிட்டனர்.

| | |
|---|---|
| Servant **fell on his knees** before **(OMIT)**him 8:26<br>Mother of Zebedee's sons kneeling down 20:20<br><br>He ran and fell on his knees Mark 5:6 | The servant fell down and **worshipping** him.<br>The mother of Zebedee's **worshipping** children him.<br>He ran and **worshipped** him. |

Jesus Christ is God because He is worshipped. இயேசுகிறிஸ்து கர்த்தர் மூவரில் ஒருவர். ஆகவே அவர் ஆராதிக்குப்படுகிறார். ஆனால் இவர்கள் அதை மறைக்கிறார்கள்.
"thou shalt worship the Lord thy God,and Him only shalt thou serve. Matt 4:10.
"Let all the angles of God worship him" Hebrews 1:6
12 times in the New Testament, Jesus is worshipped(Greek: proskuneo 4352)
yet the NIV and NASV change worship 4352(KJV) to (NASV) kneel(NIV) of bow down.

**4).** NIV ல் மொழிபெயர்ப்பில் உள்ள **உபவாசிப்பதை** ஐந்து இடங்களிலும் **ஜெபிப்பதை** மூன்று இடங்களிலும் விட்டுவிட்டார்கள். மத் 17:21- வசனம் NIVல் முற்றிலும் நீக்கிவிட்டனர்.
The NIV **omits "FASTING"** 5 times, and **weakens our PRAYER LIFE** 3 times.

| **NIV - பிழையான மொழிபெயர்ப்பு** | | **KJV- சரியான மொழிபெயர்ப்பு** |
|---|---|---|
| மத் 17:21 உபவாசத்தைப்பற்றி இயேசு கூறுவதை அறவே நீக்கிவிட்டனர். | Mat 17:21 | **This kind goeth not out but by prayer and fasting** |
| This kind can came out only by prayer. இங்கு உபவாசம் என்பதை சேர்க்கவில்லை. | Mark 9:29 | This kind can come forth by nothing but by **prayer and fasting** |
| In **hunger**-இங்கு பசி என்று மொழி பெயர்த்துள்ளனர் | 2 corin 6:5 | In fasings-உபவாசம், சரியான மொழிபெயர்ப்பு |
| Devote yourselves to fasting prayer இங்கு fasting என்ற வார்த்தை நீக்கிவிட்டனர் | 1 corin 7:5 | Give yourselves to **fasting** and prayer |
| Four days ago I was fasting praying இங்கும் fasting- என்ற வார்த்தை மட்டும் எழுதியுள்ளனர். | Acts 10:30 | Four days ago I was **fasting** ....... and prayed |
| Pray that - always - இங்கும் always என்ற வார்த்தை எப்போதும் ஜெபம் பண்ணி என்ற வார்த்தை நீக்கப்பட்டது. | luke 21:36 | Pray **always** that |
| In prayer supplication ஒருமனபட்டு என்ற வார்த்தை இல்லை | Acts 1:14 | In prayer and **supplication** |
| The prayer - ஊக்கமான வேண்டுதல் என்ற வார்த்தை நீக்கப்பட்டது. | James 5:16 | The **effectual fervent** prayer |

மேலும் இயேசுகிறிஸ்துவை மட்டம்தட்டி 17 இடங்களில் வசனங்களை திரித்துள்ளார்கள். லூாக் 8:12ல் பிசாசு என்ற வார்த்தைகளை எடுத்துப்போடுவான் என்று பார்க்கிறோம். மேலும் NIV வேதாகமத்தை வெளியிட்ட அமெரிக்காவை சார்ந்த Zondervan publishers என்னும் அமைப்பை ஸ்தாபித்த Harper Collins என்பவர் எழுதியுள்ள மேலும் இரண்டு புத்தகங்களை பார்க்கும்போது அவர் மெய்யாகவே **சாத்தானின் அடியாள்** என்பது தெரியவருகிறது.

அவருடைய புத்தகங்களின் தலைப்பு:

1). **ஓரினச் சேர்க்கையின் இன்பம்** (The Joy of Homosex)

2). **சாத்தானின் வேதம்** (The Satanic Bible)

இதன்மூலம் மிகத் தெளிவாக New International Version(NIV) என்ற மொழிபெயர்ப்பு **சாத்தானின் தனித்திட்டம்** என்பது தெரிகிறது. ஆகையால் NIV நீங்கள் உபயோகிக்கிறவர்களானால் அல்லது நீங்கள் NIV உபயோகிக்கும் ஊழியத்தோடு தொடர்புவைத்திருந்தால் அதை துண்டித்து மெய் வேத வசனங்கள் அறிய KJV Bible(King James Version)ஐ நீங்களும், உங்கள் பிள்ளைகளும் பயன்படுத்துங்கள். **இயேசுகிறிஸ்து நம்மை இரட்சித்தார், நேசிக்கிறார்** எத்தனையோமுறை நம்முடைய வாழ்க்கையில் துன்பங்கள் வந்தபோது தம்துடைய கிருபையினால் வாழவைத்தார். அந்த இயேசுவின் நாமத்தை 38 இடங்களில் நீக்கிவிட்ட NIV Bible or NIV உபயோகப்படுத்துகிற ஊழியம் உங்களுக்கு வேண்டாம். மேலும் KJV(King James Version) Bible மெய் சத்திய வசனங்கள் அடங்கியது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# St.JOHN METHODIST TAMIL CHURCH - BHYANDAR CONVENTION






மும்பையில் பயந்தர் என்ற இடத்தில் மெத்தடிஸ்ட் சபை கன்வென்ஷன் மிகவும் ஆசீர்வாதமாக நடைப்பெற்றது. **Rev.B.Prem FelixRaj** அவர்கள் தங்கள் சபை கன்வென்ஷனுக்காக வரவேண்டும் என்று சில வருடங்களுக்கு முன்பே இந்த 2016 ஜனவரிமாத கடைசி வார கன்வென்ஷனுக்கு தேதி கேட்டு வாங்கிவிட்டார். அப்போதிருந்த நல்ல ஜெப ஆயத்தத்துடன் சபை ஜனங்களும் ஜெபித்து இக்கூட்டத்தை நடத்தியதால் இத்தனை பெரிய ஆசீர்வாதம் சபை மக்களுக்கு கிடைத்தது. கர்த்தருக்கே மகிமை.

# CSI மலபார் டையோசிஸ்:

கேரளா மாநிலத்தில் வடக்கு கேரளா டையோசிஸ்(North Kerala Diocese) என்பதை இரண்டு டையோசிஸ்ஸாக CSI சினாட் பிரித்து வைத்துள்ளார்கள். கொச்சின் CSI டையோசிஸ் என்றும் மற்றதை **மலபார் CSI டையோசிஸ்** என்றும் பிரித்துள்ளனர்.

இப்போது **மலபார் CSI டையோசிஸ்க்கு புதிய பிஷப்** தெரிந்தெடுப்பு நடந்து முடிந்துவிட்டது. பிஷப் பேனலில் நான்கு பேர்களை தேர்வு செய்துள்ளனர்.

இதில் அதிக ஓட்டு பெற்றவராக அறிவிக்கப்பட்டவர் Dr.Rev.MANOJ என்பவராகும். CSI உருவாகிய காலம் தொடங்கி மலபாரில் மெஜார்ட்டியாக உள்ள Basal Mission Churchல் உள்ளவர் யாரும் இதுவரை பிஷப்பனதில்லை. மத்திய கேரளா டையோசிஸ்ஸில்(கோட்டயம்-திருவல்லா) உள்ள அச்சன்மார்கள்தான் பிஷப்பாக பதவி ஏற்றுள்ளனர். இரண்டுமுறை டையோசிஸ் பிரச்சனை வந்தபோது சினாட் வடக்கு கேரளா டையோசிஸ்க்கு பிஷப்பாக நியமித்ததும் மத்திய கேரளா டையோசிஸ்ஸிலிருந்த அச்சன்மார்கள் ஆகும்.

இம்முறை எப்படியோ வடக்கு கேரளா டையோசிஸ் அச்சன்மார்களும் DC மெம்பர்களும் தங்கள் மண்ணின் மைந்தரான பேசில் மிஷன் சபையில் பிறந்து வளர்ந்த Rev.Dr.மனோஜ்ஜை பிஷப்பாக அதிக ஓட்டில் வெற்றிபெறவைத்துவிட்டது. ஆச்சரியமே!.



ஆனால் இனி இந்த நான்கு பேரில் ஒருவரை CSI சினாட் கமிட்டி தெரிந்தெடுக்க வேண்டும். இதில் மாடரேட்டர் இல்லாத இப்போதைய நிலையில் டெப்டி மாடரேட்டர் **Rt.Rev.Thomas K.Oommen** அவர்கள் மாடரேட்டர் ஸ்தானத்தில் இருந்து தன்னுடைய **வீட்டோ** அதிகாரத்தை பயன்படுத்தி அதிக ஓட்டு பெற்றவரை தள்ளவிட்டு அதிகம் பணம் யார் கொடுக்கிறார்களோ அவர்கள் காண்பிப்பவரையே பிஷப்பாக நியமிக்கலாம்.

காரணம் Most **Rt.Rev.வில்லியம் மோசஸ்** காலத்தில் லட்சங்கள் பெற்று பிஷப்பை நியமித்து லஞ்சத்துக்கு முன் உதாரணமாக திகழ்ந்தார்.

அதன்பின் மாடரேட்டர்.**சுகந்தர்** காலத்தில் ஒருவரை பிஷப்பாக நியமிக்க **கோடி ரூபாய்கள்** வாங்கினார் என்று கூறப்பட்டது. இப்படி கிறிஸ்தவ பெயருக்கு சாபகேடாய் சபையின் உச்சத்தில் இருக்கும் தலைவர்கள் வாழும் இக்காலத்தில் **மலபார்** டையோசிஸ்ஸில் பிறந்து வளர்ந்த ஒருவரை அதுவும் அதிக ஓட்டு எண்ணிக்கையில் ஜெயித்தவரை கோடிகள் வாங்கும் கூட்டம் பிஷப்பாக நியமிப்பார்களோ என்ற சந்தேகம் மலபார் CSI டையோசிஸ் மக்கள் மத்தியில் எழுவது நியாயம்தானே.

மிக்குறைந்த எண்ணிக்கை ஓட்டுவாங்கிய வரும் பிஷப் பேனலில் நான்காவதாக ஜெயித்தவரான Rev.Oommen George அவர்கள் (கோட்டயம்) மத்திய கேரளா டையோசிஸ் Clergey Secretary யாக இப்போது பதவியில் இருப்பவராகும்.

இவர் 3முறை பிஷப் எலக்ஷனில் நின்று தோற்றுப்போனவராகும். ஆனால் இவர் எனது நெருங்கிய நண்பராகும். இவர் தகப்பனார் மிக சிறந்த ஊழியத்தை மத்திய கேரளாவில் நிறைவேற்றி ஓய்வுபெற்றவராகும். இவர் நல்ல ஆவிக்குரிய குடும்பத்தில் வளர்க்கப்பட்டவராகும். நல்ல **பிரசங்க தாலந்து பெற்றவரும்,** நன்றாக ஜெபிப்பவருமாகும்.

ஒரே ஒருமுறை சகோ.**DGS.தினகரனின் இயேசு அழைக்கிறார்** ஸ்தாபனத்தின் தவறான உபதேசத்தை பின்பற்றுகிறவரும் இயேசு அழைக்கிறார் ஸ்தாபனத்தின் தவறான கொள்கைகளை ஒத்துக்கொண்டு இப்போதும் **இயேசு அழைக்கிறார்** ஸ்தாபனத்துக்கு கேரளத்தின் ஏதோ ஒரு வகையில் பொருப்பு வகிக்கிறார் என்று கேள்விப்பட்டேன்.

இந்த பிஷப்புக்கு இப்போதுள்ள டெப்டி மாடரேட்டரும், தற்காலிக மாடரேட்டர் பொறுப்பு வகித்தவருமாகிய Rt.Rev. Thomas K.Oommen அவர்கள் நிச்சயம் **தன் வீட்டோ** அதிகாரத்தை பயன்படுத்தி நான்காவது நிலையில்உள்ள இவரை **பிஷப்** ஆக்கி அதிக ஓட்டு பெற்றவரை கடைசியில் ஒதுக்கி மத்திய கேரளா டையோசிஸ் ஆயர்களிலிருந்து ஒருவர் மலபார் டையோசிஸ்ஸை பிஷப்பாக ஆளுவதற்கு மறுபடியும் தெரிந்தெடுக்கப்படலாம்.

**மலபார்** டையோசிஸ்ஸின் இந்த எலக்ஷனில் கோடிகள் கொடுத்து விலைக்கு வாங்கப்படாத தெய்வபயம் உள்ள ஒரு பிஷப் தெரிந்தெடுக்கப்பட்டு சரித்திரம் படைக்கவேண்டும். இதற்காக ஜெபிப்போம். ❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# KARNATAKA CSI DIOCESE -CSI CHURCH - HOSUR



FMPBயின் SCAN கூட்டங்கள் ஒசூர் FMPB பொருப்பாளர்களால் மிக உற்சாகமாக ஏற்பாடு செய்யப்பட்டது. Rev.Koilraj அவர்கள் மிகவும் என்னை கட்டாயப்படுத்தி என் தேதிகளை ஒசூர் FMPB கூட்டத்துக்காக வாங்கினார்கள். FMPBயின் அந்த குறிப்பிட்ட ரீஜனலில்உள்ள எல்லா மிஷனரி ஆயர்களும் அந்த கூட்டத்தில் கலந்துகொண்டனர். முதல்நாள் FMPB மிஷனரி ஆலயங்களின் **சுதேச மிஷனரி** ஊழியர்களுக்காக கூட்டங்கள் நடத்தப்பட்டு, சுதேச மிஷனரி ஊழியர்களுக்கு மதிய சாப்பாடும் வழங்கப்பட்டு கூட்டம் ஆசீர்வாதமாக நடந்துமுடிந்தது. அதன்பின் ஒவ்வொரு நாளும் மாலை கூட்டங்கள் ஒசூர் CSI ஆலயத்தில் வைத்து மிக ஆசீர்வாதமாக நடைபெற்றது. ஞாயிறு ஆராதனையிலும் கர்த்தர் என்னை அவர்களுக்கு தேவையுள்ள செய்திகளை அளிக்க உதவி செய்தார். கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது. FMPB மிஷனரி பணிதள தேவைகளுக்கான பணஉதவியும் கிடைத்தது. ஒசூரில் நடந்த என் கூட்டத்துக்குபின் அந்த SCAN கூட்டத்தில் 50 புதிய **அங்கத்தினர்கள்**, 5 புதிய **ஜெபக்குழுக்கள்**, 1 SCAN **ஜெபக்குழு** ஆகியவைகள் உருவானது. மேலும் மாதந்தோறும் 7000 முதல் 10000 வரை கூடுதல் காணிக்கை ஒசூர் FMPB SCAN ஊழியத்துக்கு கிடைக்க கர்த்தர் விசுவாசிகளை ஏவியுள்ளார்.கர்த்தருக்கு துதி உண்டாவதாக.

## 2015-2016 வருட காணிக்கை வரவு விவரம்:

ஜாமக்காரன் வாசகர்கள் தொடர்ந்து காணிக்கைகளை எனக்கு அனுப்பி ஊக்குவித்த 2015-2016 வருட கையிருப்பு விவரம். இது வாசகர்கள் எனக்கு காணிக்கைகளை அனுப்பி என்னுடைய வங்கி கணக்கின் அக்கவுண்ட் நெம்பர்களின் விவரங்களை கேட்டு எழுதுகிறவர்களுக்கும் பிரயோஜனமாக இருக்கும்.

**1**

**STATE BANK OF INDIA**(SALEM-1970)
**A/C No: 10764116842**
SWIFT CODE - SBININBB637- 10764116842
IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6.03.16 | Transfer through GCC | | | 2500.00 | 23630.59Cr |
| | TRANSFER FROM Mr. HARIKRISHNA P V | | | | |
| 7.03.16 | PAID TO MR SIDDESWARAN | 000116115 | 15000.00 | | 8630.59Cr |
| 18.03.16 | BY DD TRF | 000359456 | | 4000.00 | 12630.59Cr |
| 18.03.16 | BY CHQ TRF 4 CHQS | 538976288 | | 10500.00 | 23130.59Cr |
| 22.03.16 | CASH DEPOSIT SELF | | | 1000.00 | 24130.59Cr |
| 22.03.16 | INTER BRCH FEE | | 57.00 | | 24073.59Cr |

**2**

**CANARA BANK - SALEM**
**(SURAMANGALAM BRANCH)**
**A/C No: 1219101013622.**
SWIFT CODE - CNRB0001219 -1219101013622.
IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 07 | | rom CHRISTOPHER | | | | |
| 08 | | MONI D | | | | |
| 09 | 28/03/2016 | Consolidated DD/ | 653346 | 25440.00 | | 122753.25 |
| 10 | | PO - Issue/Liqui | | | | |
| 11 | | dation | | | | |
| 12 | 28/03/2016 | SC charge:Multip | 653346 | 110.00 | | 122643.25 |
| 13 | | le DD Issue(One | | | | |
| 14 | | Acct) | | | | |

**3**

**STATE BANK OF TRAVANGORE**
(SALEM BRANCH CODE - 70328)
**A/C No: 57041760879.**
SWIFT CODE - SBTR0000328- 57041760879
IFSC CODE SBTR0000328, RBCMS BXX - 57041760879.

| DATE | PARTICULARS | CHEQUE NO. | DEBIT | CREDIT | BALANCE |
|---|---|---|---|---|---|
| | | | | Brought Forward | 22593.93Cr |
| | | | | 7000.00 | 29593.93Cr |
| 06.03.16 | IMB 13783645 | | | | |
| | TRANSFER FROM CITY EXCHANGE - MONEY | | | | |
| 28.03.16 | CASH WITHDRAWAL BY CHEQUE | 42285 | 25000.00 | 1000.00 | [illegible]4593.93Cr |

**4**

**SYNDICATE BANK** (SALEM SURAMANGALAM BRANCH)
**A/C.No: 2200009312.**
SWIFT CODE - SYNBINBB027 6293-2200009312.
IFSC CODE - SYNB0006293-2200009312.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | 1,500.00 | 6,009.29 |
| 15/03/2016 | NEFT IDIBH16075313306 Mr. K PONPANDI INBARASU | 0 | | 5,000.00 | 11,009.29 |
| 24/03/2016 | CASH DEPOSIT | | | | |
| 28/03/2016 | SELF | 177685 | 10,000.00 | | 1,009.29 |

**5**

INDIAN OVERSEAS BANK.
SALEM MAIN
A/C NO 008001000024114.
IFSC : IOBA0000080

| | | | | |
|---|---|---|---|---|
| 19-03-2016 | RADHA | | 3000.00 | 16359.30 Cr |
| 22-03-2016 | SB 2973 | | 50000.00 | 66359.30 Cr |
| 28-03-2016 | 230427SELF | 50000.00 | | 16359.30 Cr |

## 2015-2016 வருட காணிக்கை வரவு விவரம்:

2016 மார்ச் மாத ஜாமக்காரனை 28.3.2016 அன்றுதான் அச்சகத்துக்கு அனுப்ப முடிந்தது. ஆகவே 2016 மார்ச்ச 28ம் தேதி வரை என் 5 வங்கிகளின் கையிருப்பு தொகை:

| | |
|---|---|
| 1). | 24073.59 |
| 2). | 1,22643.25 |
| 3). | 4593.93 |
| 4). | 1009.29 |
| 5). | 16359.30 |
| | **1,68,679.36** |

இதுதான் 28.3.2016 வரை கையிறுப்பு தொகை ஆகும்.

ஒவ்வொரு வருடமும் வாசகர்களாகிய நீங்கள் Online,EMO,DD,Cheque வழியாக அனுப்பிய எல்லா காணிக்கைகளுக்கும் மிக்க நன்றி. ஒரு மாதமும் பணகுறைவு இல்லாமல் மாதத்தில் இரண்டு ஜாமக்காரன்(தமிழ்-மலையாளம்) வெளியிட போதுமான பணம் நீங்கள் அனுப்பிக்கொண்டிருப்பதற்காக யாவருக்கும் ஜாமக்காரன் வாசகர்கள் பெயரிலும், என் பெயரிலும் நன்றிக்கூறிக்கொள்கிறேன்.

---

# வாசகர் கடிதம்

**கடிதம் 1:** அண்ணன் அவர்களுக்கு, நீங்கள் முன்னாள் பொது செயலர் சகோ.ஸ்டீபன் ஜாய்சன் அவர்களைப்பற்றிய எழுதியது அவர்களின் பிள்ளைகளின் வாழ்க்கைக்கு பெரும் தடையாக மாறியுள்ளது. நீங்கள் அவரைப்பற்றி எழுதியது எங்களுக்கும் வருத்தத்தை கொடுக்கிறது. - சகோ.ரெஜினல்ட்

**கடிதம் 2:** அண்ணன் அவர்களுக்கு, சகோ.சைமன் பொன்னையாவால் சகோ.ஜாய்சன் அவர்கள் பழிவாங்கப்பட்டு சைமன் அவர்களுடன் டாக்டரேட் வாங்கிய மற்றொருவருடன் கூட்டு சேர்ந்து திட்டமிட்டு சகோ.ஜாய்சன் அவர்களை விழ செய்ததாகும். அது சதி என்றுதான் கூறவேண்டும். - சகோதரி.பிரேமா

**கடிதம் 3: FMPB PRESIDENT அவர்கள் எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி:**

FMPB -யில் DR.DANIEL அவர்கள் முதல் மிஷனரிகளைப்பற்றி JUNE மாத அறைக்கூவலில் எழுதியது BROAD OVERVIEW OF **PERIAMALAI MISSION FIELD** AND IT NEED NOT BE CONSTRUED AS A HISTRORICAL DOCUMENTARY.

நடந்த வேறு சில தவறுகளை விசாரணை நடத்தி நடவடிக்கையும் எடுத்துவிட்டோம்.

I WOULD LIKE TO CLARIFY THAT SOME OF THE STATEMENTS ECHOED IN JAMAKARAN ON FMPB LEADERS ARE NOT BASED OF FACTS. OUR ONLY REGRET IS THAT SOME OF ISSUES BROGUHT OUT IN JAMAKARAN COULD HAVE BEEN BROUGHT TO OUR NOTICE TO GET THE CORRECT PERSPECTIVE. SO THAT THE TRUE PICTURE IS PRESENTED TO THE READERS. AS A PRESIDENT IT IS MY DESIRE THAT FMPB REMAINS AS AN **"OPEN BOOK"** TRANSPARENT AND FRUTHFUL IN EVERY RESPECT.........................................................FMPB.

- Dr.JOHN SAMUEL, IAS
PRESIDENT - FMPB

(FMPB தலைவர் அவர்கள் எழுதிய கடிதத்தின் சுருக்கம் மட்டுமே இங்கே குறிப்பிட்டுள்ளேன். (கடிதம் எழுதிய FMPB தலைவர் அவர்களுக்கு நன்றி). ❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖



## வாழ்த்துகிறோம் - வரவேற்கிறோம்:

CSI சென்னை பேராயத்திற்கு புதிதாக தெரிந்தெடுக்கப் பட்டுள்ள பிஷப் Rt.Rev.JAYARAJ GEORGE STEPHEN, MA.,BD.,அவர்களை வாழ்த்தி வரவேற்கிறோம்.

கர்த்தர்தாமே சென்னை பேராய மக்களை ஆசீர்வதிப்பாராக. சென்னை CSI பேராய மக்களை ஆவிக்குரிய பாதையிலும், வசனத்திலும் வளர்த்திட கர்த்தர் புதிய பேராயருக்கு ஞானத்தை அருளுவாராக. ஜாமக்காரன் வாசகர்கள் சார்பிலும், என் சார்பிலும் புதிய பேராயருக்கு வாழ்த்து கூறுகிறோம்.

**MARCH 2016**

# Printed Book/Book Post

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.